بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ      نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ      وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

தொகுதி 9

இதழ் 46

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

ஹிஜ்ரீ கமரீ 1446 - ஜமாதில் அவ்வல் 11 ★ ஹிஜ்ரீ ஷம்ஸி 1403 - நுபுவ்வத் 14★ 14 நவம்பர் 2024

## அல்லாஹ்வின் கட்டளை

لَا یَبۡعَثُ اللّٰہُ مَنۡ یَّمُوۡتُ ؕ بَلٰی وَعۡدًا عَلَیۡہِ حَقًّا وَّ لٰکِنَّ اَکۡثَرَ النَّاسِ لَا یَعۡلَمُوۡنَ ○

**பொருள்**

மரணமடைந்து விடுபவரை அல்லாஹ் எழுப்ப மாட்டான் என்று அவர்கள் அல்லாஹ்வின் மீது உறுதியான சத்தியங்கள் செய்கின்றனர். (ஆனால், உண்மை) அவ்வாறன்று; (நிறைவேற்றுவதை) அவன் கடமையாகக் கொண்டுள்ள வாக்குறுதியே இது. ஆனால், பெரும்பாலான மக்கள் அறிவதில்லை.

(16: 39)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸுர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸுர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## இறைவன் இருக்கின்றான்; மேலும் நிச்சயமாக இருக்கின்றான் என்பதற்கு லட்சக்கணக்கான பரிசுத்தவான்களின் சாட்சியம் இருக்கின்றது. மேலும் அவர்கள் தமது செயல் நிலையின் மூலமாகவும் கூறியிருக்கின்றனர். மேலும் இதயத்தின் இரத்தத்தால் இந்த சாட்சியத்தை எழுதியுள்ளனர். அவ்வாறிருந்தும் ஒருவர் மறுக்கின்றார் என்றால் பின்னர் அவர் மூடரே ஆவார்

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

இறைவன் இல்லை என்று ஒருவர் சந்தேகத்தை முன்வைத்தால் பின்னர் அது அறிவீனமான விஷயமாகும். மேலும், இறைவனை நிராகரிக்கின்ற நபரை விட அறிவீனரும், மூடரும் வேறு எவரும் கிடையாது. உலகில் இரண்டு சாட்சியங்களை கூறுவதால் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி விடுகின்றது. சில நேரில் கண்ட சாட்சியங்களின் கூற்றின் அடிப்படையில் உயிர் போன்ற அன்பிற்குரிய விஷயத்திற்கு எதிராக கூட நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி விடுகின்றது. மேலும் குற்றவாளிக்கு தூக்குத் தண்டனை வழங்கிவிடுகின்றது. சாட்சியங்கள் போலியான மற்றும் சதித் திட்டத்தால் உருவாக்கப்பட்டதற்கான ஐயம் அவர்களுக்கு இருப்பதில்லை. மாறாக. அதில் அவர்களுக்கு நம்பிக்கை இருக்கின்றது. ஆனால் இறைவனைக் குறித்து ஆயிரக்கணக்கான, லட்சக் கணக்கான மனிதர்கள், தமது சமுதாயத்தைச் சேர்ந்த தமது நாட்டைச் சேர்ந்த ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மையாளர்கள், நன்னடத்தைக் கொண்டவர்கள் சாட்சியம் வழங்கியுள்ளனர். அவை போதுமானவையாக கருதப்படுவதில்லை. இதை விட மடமையும், பிடிவாதமும் வேறு என்ன இருக்க முடியும்? இறைவன் இருக்கின்றான். மேலும் நிச்சயமாக இருக்கின்றான் என்பதற்கு லட்சக்கணக்கான பரிசுத்தவான்களின் சாட்சியம் இருக்கின்றது. மேலும் அவர்கள் தமது செயல் நிலையின் மூலமாகவும் கூறியிருக்கின்றனர்; மேலும் இதயத்தின் இரத்தத்தால் இந்த சாட்சியத்தை எழுதியுள்ளனர். அவ்வாறிருந்தும் ஒருவர் மறுக்கின்றார் என்றால் பின்னர் அவர் மூடரே ஆவார். அடுத்து, விநோதமான விஷயம் என்னவென்றால், ஒரு விவகாரத்தில் கருத்து கூறுவதற்கு அதைக் குறித்த அறிவு ஒருவருக்கு இருப்பது அவசியம் ஆகும். எந்த நபருக்கு அறிவே இல்லையோ அவர் கருத்துக் கூறுவதற்கு

இதன் தொடர்ச்சி. 8-ம் பக்கம் ......

## ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹுபுல் சிலையின் மீது தனது தடியை அடித்தார்கள். மேலும் அது உடைந்து விட்டது. அப்போது அபூஸுஃப்யானை நோக்கி அபூஸுஃப்யானே! நீ உஹது போர் நாளன்று எவ்வளவு ஆணவத்துடன் اُعۡلُ ھُبَلۡ. اُعۡلُ ھُبَلۡ என்று முழக்கமிட்டாய்? அது உனக்கு நினைவிருக்கின்றதா? என்று ஒரு ஸஹாபி கேட்டார் இறை இயக்கங்களின் முன்னேற்றங்கள் மீது ஷைத்தான் எவ்வளவு தான் தடைகளை ஏற்படுத்தினாலும் எவ்வளவுதான் சதித்திட்டங்கள் தீட்டினாலும் இறுதியில் அல்லாஹ்வின் நபியே வெற்றி பெறுகின்றார்

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் சூரா அல்ஹஜ் வசனம் 57 மற்றும் 58வது வசனங்களுக்கு விளக்கவுரை வழங்கியவாறு கூறுகின்றார்கள்:

வசனம் கூறுகின்றது: இந்த நேரம் வந்துவிட்டால் பின்னர் அந்நாளில் ஏக இறைவனின் அரசாங்கம் பூமியில் நிலை பெற்று விடும். மேலும் இணை வைத்தலும், நிராகரிப்பும்; உலகிலிருந்து அழிந்து விடும். ஆக, ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களும் ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை) அவர்களும் எந்த இறை ஆலயத்தை ஏக இறைவனின் வழிபாட்டிற்காக கட்டினார்களோ மேலும், எததனை பிற்காலத்தில் அவர்களுடைய வழிதவறிய சந்ததிகள் 360 சிலைகளால் நிறைத்து விட்டார்களோ அந்த ஆலயத்திலிருந்து அந்த சிலைகள் மக்கா வெற்றிக்குப் பிறகு எவ்வாறு அகற்றப்பட்டன என்று பாருங்கள்! எவ்வாறு ஒவ்வொரு சிலைகளும் துண்டு துண்டாக்கப்பட்டு பைத்துல்லாஹ்விலிருந்து வெளியே வீசி எறியப்பட்டது என்று பாருங்கள்! அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஒவ்வொரு சிலையின் மீதும் தடியால் அடித்து சென்று கொண்டிருந்தார்கள். மேலும்,

جَآءَ الۡحَقُّ وَزَہَقَ الۡبَاطِلُ ؕ اِنَّ الۡبَاطِلَ کَانَ زَہُوۡقًا

என்று கூறிக் கொண்டு சென்றார்கள். பொருள்: உண்மை வந்து விட்டது; மேலும் பொய் ஒடி விட்டது; பொய் என்பது ஒழிவிடக் கூடிய ஒன்றே ஆகும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முதலில் ஹுபுல் சிலையின் மீது தனது தடியால்

இதன் தொடர்ச்சி. 8-ம் பக்கம் ......

## நபிமொழி

### ஸகாத் கொடுப்பது மற்றும் வறியவர்களுக்கு பால் பருகக் கொடுப்பது

(2633) ஹஸ்ரத் அபூ ஸயீத் குத்ரீ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் ஒரு கிராமவாசி வந்தார். அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் ஹிஜ்ரத் தொடர்பாக கேட்டார். அப்போது அன்னார் (ஸல்) கூறினார்கள்: ஹிஜ்ரத் விவகாரம் என்பது மிகவும் கடினமானதாகும். உம்மிடம் சில ஒட்டகங்கள் இருக்கின்றனவா? அதற்கு, இருக்கின்றன என்று அவர் கூறினார். அதற்கு நீர் ஸகாத் கொடுக்கின்றீரா? என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள். ஆம்! கொடுக்கின்றேன் என்று அவர் கூறினார். அப்போது, பால் அருந்துவதற்காக எவருக்காவது இரவலாகக் கால்நடையைக் கொடுக்கின்றீரா? என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள். அதற்கு, ஆம்! கொடுக்கின்றேன் என்று அவர் கூறினார். பின்னர், இந்த ஒட்டகங்களுக்கு தண்ணீர் அருந்தச் செய்யும் போது அதனிடம் பால் கறக்கின்றீரா? (அதாவது வறியவர்களுக்கு அவர்களுக்குரிய பாலைக் கொடுக்கின்றீரா?) என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள். அதற்கு ஆம்! என்று அவர் கூறினார்.

அப்போது, அன்னார் (ஸல்) கூறினார்கள்:

அப்படியென்றால், நீர் கடல்களுக்கு அப்பால் இருந்து கொண்டு கூட அமல் செய்து கொண்டிருந்தாலும் அல்லாஹ் உம்முடைய ஒரு செயலுக்கான நற்கூலியை வழங்குவதில் உமக்கு எந்தக் குறைவும் வைக்க மாட்டான்.

(2634) ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பயிர் (களின் கதிர்)கள் அசைந்தாடிக் கொண்டிருந்த ஒரு நிலத்தின் பக்கம் சென்றார்கள்.

இது யாருடையது? என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள். அப்போது, இன்ன நபர் இதனைக் குத்தகைக்குக் கொடுத்திருக்கின்றார் என்று அங்கிருந்த மக்கள் கூறினர். அதற்கு, அன்னார் (ஸல்) கூறினார்கள்: இந்த நிலத்திற்காகக் குறிப்பிட்ட ஒரு வாடகையை அவர் பெற்றுக் கொள்வதை விட (அவர் அதை இலவசமாகப் பயன்படுத்திக் கொள்ளும்படி) இரவலாகக் கொடுத்து விட்டிருந்தால் அவருக்கு அது நன்மையானதாக இருந்திருக்கும்.(ஸஹீஹ் புகாரீ, பாகம் 4, கிதாபுல் ஹிபா)

* * * * * * * *

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**அகழ்ப் போரைக் குறித்த சில விளக்கங்கள் & பனூ குறைழா போரின் சூழல்கள் மற்றும் சம்பவங்களின் பின்னணியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பரிசுத்தமான வாழ்க்கை வரலாற்றைக் குறித்த ஈமானை வலுவூட்டும் குத்பா பேருரை**

**மேலும் பாகிஸ்தான் வங்கதேசம் அல்ஜீரியா மற்றும் சூடான் அஹ்மதிகளுக்காக துஆ செய்வதற்கான வழிகாட்டல்**

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் ஆயுதத்தை களைந்து விட்டீர்கள்; அல்லாஹ்வின் மீது ஆணையாக! நாங்கள் ஆயுதங்களை கீழே இறக்கி வைக்கவில்லை என்று ஜிப்ராயீல் (அலை) அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எதிரியை எதிர் கொண்டதில் இருந்து வானவர்கள் ஆயுதங்களை கீழே வைக்கவில்லை. மேலும், தற்போதும் கூட நாங்கள் அஹ்ஸாபை பின்தொடர்ந்து சென்ற பிறகு திரும்பி வந்து கொண்டிருக்கின்றோம்

அகழ்ப் போர் அல்லது அஹ்ஸாப் போர் அஹ்ஸாப் போர் என்பது எதிர்பாராத வகையில் முடிவுற்றது. அது ஒரு மிகவும் அபாயகரமான போராகவே இருந்தது. இதை விட பெரிய ஓர் அசாதாரண துன்பம் அக்காலத்தில் முஸ்லிம்களுக்கு ஏற்பட்டிருக்கவில்லை

இஸ்ரேல் அரசாங்கம், அமெரிக்க அரசாங்கம் மற்றும் வல்லரசுகளின் கைகளை அல்லாஹ்வால் தடுக்க முடியும். அவனது கையில் அனைத்து சக்தியும் உள்ளது. ஆனால், அதற்காக முஸ்லிம்களும் தமது செயலை அல்லாஹ்வின் திருப்திக்கு ஏற்ப அமைத்துக் கொள்ள வேண்டும். மேலும் அனைவரும் சகோதரர்களாக ஆகிவிட்டதற்கான முன்மாதிரியை வெளிப்படுத்த வேண்டும். தென்பட்டுக் கொண்டிருக்கும் பரஸ்பரம் தங்களுக்குள் இருக்கும் கருத்து வேறுபாடுகளுக்கு முடிவு கட்ட வேண்டும். அப்போதுதான் அல்லாஹ்வின் உதவிக்கான வாக்குறுதியும் முழுமை பெறும்

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 11 அக்டோபர் 2024** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 140**3** ஆண்டு **அகா** மாதம் **11 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَ رَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

இன்றைய நாட்களில் அஹ்ஸாப் போர் பற்றி கூறப்பட்டு வருகின்றது.நிராகரிப்பாளர்கள் இரவில் வீசிய சூறாவளி மற்றும் புயலின் காரணமாக மைதானத்தை காலி செய்து விட்டனர் என்று எடுத்துரைக்கப்பட்டிருந்தது. நிராகரிப்பாளர்கள் மைதானத்தை காலி செய்து விட்டு சென்றதைக் குறித்த விளக்கத்தில் வரலாற்றில் இவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது: அதாவது, அல்லாஹ் நிராகரிப்பாளர்களை இறைத் தூதர் (ஸல்) அவர்களை விட்டு திருப்பி விரட்டியடித்து விட்ட போது அன்னார் (ஸல்) கூறினார்கள்:.

اَلْآنَ نَغْزُوْهُمْ وَلَا يَغْزُوْنَنَا

பொருள்: இனி நாம் குறைஷியர்களுக்கு எதிராக புறப்படுவோம்; ஆனால், அவர்களுக்கு நமக்கு எதிராக புறப்படுவதற்கு தைரியம் இருக்காது.

மேலும், இதன் பிறகு உண்மையில் அப்படியே நிகழ்ந்தது. முஸ்லிம்களின் மீது தாக்குதல் தொடுப்பதற்கு குறைஷியர்களுக்கு துணிவும், தைரியமும் இருக்கவில்லை. எந்த அளவுக்கு என்றால், இறைத் தூதர் (ஸல்) அவர்களின் கரத்தால் மக்கா வெற்றி கொள்ளப்பட்டது.

எவ்வாறு இருப்பினும், காலை விடிந்த போது அகழுக்கு அப்பால் எந்த எதிரியும் இருக்கவில்லை. அனைவரும் தப்பியோடியிருந்தனர். முஸ்லிம்கள் தமது வீடுகளுக்கு செல்வதற்கு இறைத் தூதர் (ஸல்) அவர்கள் அனுமதி வழங்கியிருந்தனர். அனைவரும் மகிழ்ச்சியுடன் தமது வீடுகளுக்கு திரும்பிச் செல்லத் துவங்கினர்.
( ஸுபுலுல் ஹுதா வர் ரஷாத், தொகுதி 4, பக்கம் 389 - 390, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத், 1993)

அகழ் முற்றுகை என்பது 15 நாட்கள் வரை நீடித்தது என்றும் அல்லது மற்றொரு கூற்றின் படி இந்த முற்றுகை 20 நாட்கள் வரை நீடித்தது என்றும் கூறப்படுகின்றது. மேலும், ஒரு மாதம் வரை நீடித்தது என்றும் கூறப்படுகின்றது. (இம்தினாஉல் அஸ்மாஃ, பாகம் 1, பக்கம் 242, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத்)

அகழ்ப் போரில் 9 நபர்கள் ஷஹீத் ஆகியிருந்தனர். ஒருவர் ஸஅத் பின் முஆஸ் (ரலி) அவர்கள் ஆவார்கள். இவர்கள் இந்தப் போரில் காயமடைந்திருந்தார்கள். மேலும் சில நாட்களுக்குப் பிறகு மரணமடைந்து விட்டார்கள். அனஸ் பின் அவ்ஸ (ரலி) அவர்கள், பின்னர் அப்துல்லாஹ் பின் ஸஹல் (ரலி), துஃபைல் பின் நுஃமான் (ரலி), ஸஃலபா பின் அன்மஃ பின் அதீ (ரலி), கஅப் பின் ஸைத் (ரலி), கைஸ் பின் ஸைத் பின் ஆமிர் (ரலி), அப்துல்லாஹ் பின் அபீ காலித் (ரலி), அபூ ஸினான் பின் ஸைஃபீ பின் ஸகர் (ரலி) ஆகியோர் (அந்த ஷஹீதுகள் ஆவர்). மேலும் உண்மையில், இரண்டு ஸஹாபிகள் முதலில் ஷஹீது ஆகியிருந்தனர். அவர்களை குறித்து ஏற்கனவே கூறப்பட்டிருந்தது. அவர்கள் அபூ ஸுஃப்யானின் படையைக் குறித்து அறிந்து வருவதற்காக சென்றிருந்தார்கள். மேலும் அங்கு ஷஹீது ஆகிவிட்டனர். இவ்வாறு மொத்தம் 11 நபர்கள் ஷஹீது ஆகினர். ஸுலைத் (ரலி) மற்றும் ஸுஃப்யான் பின் அவ்ஃப் அஸ்லமா (ரலி) ஆகியோர் அந்த இரண்டு ஸஹாபிகள் ஆவர்.

இணை வைப்பாளர்களில் மூன்று நபர்கள் கொல்லப்பட்டனர். அவர்களின் பெயர்கள் :அம்ர் பின் அப்தே வுத், நவ்ஃபல் பின் அப்தில்லாஹ் பின் முகைரா மற்றும் உஸ்மான் பின் முனப்பஃ.
(ஸுபுலுல் ஹுதா வர் ரஷாத், தொகுதி 4, பக்கம் 364, 365, 390, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத், 1993)

நாம் வரலாற்றில் பார்த்தது போன்று அகழ்ப் போர் அற்புதமான வடிவில் நிறைவடைந்தது. இது குறித்து ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

அதாவது ஏறத்தாழ 20 நாட்கள் வரை முற்றுகையிட்டப் பிறகு நிராகரிப்பாளர்களின் படை மதீனாவிலிருந்து தோல்வியுற்றவாறு திரும்பிச் சென்றது. மேலும் அவர்களின் உதவிக்காக வெளியேறி இருந்த பனூ குறைழா கோத்திரமும் தனது கோட்டைக்குள் திரும்பிச் சென்று விட்டது. இந்தப் போரில் முஸ்லிம்களுக்கு அதிக உயிர் இழப்பு ஏற்படவில்லை. அதாவது 5,6 நபர்கள் மட்டுமே ஷஹீத் ஆகியிருந்தனர். ஆயினும், அவ்ஸ் கோத்திரத்தின் பெரும் தலைவர் ஸஅத் பின் முஆஸ் (ரலி) அவர்களுக்கு எப்படிப்பட்ட ஆழமான காயம் ஏற்பட்டது என்றால், அன்னார் இறுதியில் அதனால் உயிர் பிழைக்க முடியவில்லை. மேலும், இந்த இழப்பு முஸ்லிம்களுக்கு ஈடு செய்ய முடியாத பாதிப்பாக இருந்தது. நிராகரிப்பாளர்களின் படையில் மூன்று நபர்கள் மட்டுமே கொலையுண்டனர். ஆயினும், இந்தப் போரில் குறைஷியர்களுக்கு எப்படிப்பட்ட பின்னடைவு ஏற்பட்டது என்றால், அதன் பிறகு அவர்களுக்கு பின்னர் ஒருபோதும் முஸ்லிம்களுக்கு எதிராக இவ்வாறு படை திரட்டி புறப்படுவதற்கோ அல்லது மதீனா மீது தாக்குதல் தொடுப்பதற்கோ அவர்களுக்கு துணிவு வரவில்லை. மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பு சொல்லுக்கு சொல் முழுமையடைந்தது.

நிராகரிப்பாளர்களின் படை சென்று விட்ட பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் ஸஹாபிகளுக்கு திரும்பிச் செல்வதற்கு கட்டளை வழங்கினார்கள். மேலும், முஸ்லிம்கள் போர் மைதானத்திலிருந்து எழுந்து மதீனாவிற்குள் நுழைந்து விட்டனர். அகழ்ப் போர் அல்லது

அஹ்ஸாப் போர் என்பது இவ்வாறு எதிர்பாராத வகையில் முடிவுற்றது. அது ஒரு மிகவும் அபாயகரமான போராகவே இருந்தது. இதை விட பெரிய ஓர் அசாதாரண துன்பம் அக்காலத்தில் முஸ்லிம்களுக்கு ஏற்பட்டிருக்கவுமில்லை ; மேலும் அதன் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்வில் அந்த அளவிலான எந்தத் துன்பமும் அவர்களுக்கு நேரிடவும் இல்லை. இது ஓர் அபாயகரமான நிலநடுக்கமாக இருந்தது. அது இஸ்லாமியக் கட்டடத்தின் அஸ்திவாரத்தை அசைத்துப் பார்த்தது. மேலும், அதன் கொடூரமான காட்சிகளைக் கண்டு முஸ்லிம்களின் கண்களில் இரத்தம் வழிந்து விட்டது. மேலும், அவர்களின் குலை நடுங்கி விட்டது. மேலும், தற்போது அவ்வளவுதான் ; கதை முடிந்து விட்டது என்று பலவீனமான மக்கள் கருதிவிட்டனர். மேலும், இந்த அபாயகரமான நிலநடுக்கத்தின் அதிர்வு ஏறத்தாழ ஒரு மாதம் வரை அவர்கள் மீது இருந்து வந்தது. மேலும் பல்லாயிரக்கணக்கான இரத்த வெறி பிடித்த மிருகங்கள் அவர்களின் வீடுகளை முற்றுகையிட்டு அவர்களின் வாழ்க்கையை கசப்பானதாக ஆக்கியிருந்தனர். இந்தத் துன்பத்தின் வேதனையை பனூ குறைழாவின் நம்பிக்கை துரோகம் என்பது இரட்டிப்பாக்கி இருந்தது. மேலும் இந்த அனைத்து குழப்பங்களுக்கும் பின்னால் பனூ நழீரைச் சேர்ந்த நன்றி கெட்ட அந்த யூதர்கள் இருந்தனர். அதாவது எவர்கள் மீது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கருணை செய்தவாறு,மதீனாவிலிருந்து பாதுகாப்புடன் வெளியேறுவதற்கு அவர்களுக்கு அனுமதி வழங்கியிருந்தார்களோ. அதே கோத்திரத்தின் யூதத் தலைவர்களின் தூண்டுதலின் காரணமாகவே அரேபிய பாலைவனத்தின் அனைத்து பிரபலமான கோத்திரங்களும் இஸ்லாத்தின் மீதான பகைமையின் போதையில் தன்னிலை மறந்து முஸ்லிம்களை அழிப்பதற்காக மதீனாவில் ஒன்று கூடியிருந்தனர். இந்த வன விலங்குகளுக்கு நகரத்திற்குள் நுழைவதற்கு சந்தர்ப்பம் கிடைத்திருந்தால் பின்னர் ஒரு முஸ்லிம் கூட உயிர் பிழைத்திருக்க மாட்டார் என்பதும், எந்தவொரு தூய முஸ்லிம் பெண்மணியின் கண்ணியமும் அந்த மக்களின் அசுத்தமான தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பாக இருந்திருக்காது என்பதும் நிச்சயமாக உறுதியான விஷயமாகும். ஆயினும், இது அல்லாஹ்வின் அருளும், அவனது வல்லமையின் மறைமுகமான கரமமும் அவர்களை தோல்வியுற்று திரும்பச் செய்தது. அவர்களின் உள்ளங்கள் எவ்வித இலக்கையும் அடையாமல் நிராசையடைந்தன. இவ்வாறு அவர்களுக்கு திரும்பிச் செல்ல நேரிட்டது.மேலும் முஸ்லிம்கள் நன்றி மற்றும் மனநிறைவுடன் அமைதி மற்றும் பாதுகாப்பின் சுவாசத்தை சுவாசித்தவாறு தமது வீடுகளுக்கு திரும்பிச் சென்றனர். ஆனால் பனூ குறைழாவின் அபாயம் அது வரையில் இன்னும் நிலைபெற்றிருந்தது. இந்த மக்கள் மிகவும் அபாயகரமான வடிவில் தமது நம்பிக்கை துரோகத்தை வெளிப்படுத்தி விட்டு தற்போது பாதுகாப்பாக தங்களது கோட்டைகளுக்குள் சென்று விட்டனர். மேலும், இனி எந்த நபராலும் நம்மை ஒன்றும் செய்து விட முடியாது என்று அவர்கள் கருதியிருந்தனர். ஆனால்,

எவ்வாறு இருப்பினும், அவர்களுடைய குழப்பத்தை ஒழித்துக் கட்டுவது அவசியமானதாக இருந்தது. ஏனெனில், அவர்களின் இருப்பு என்பது மதீனாவில் மறைவான எதிரியை உடன் வைத்திருப்பதற்கு ஒருபோதும் குறைவானதாக இருக்கவில்லை. அதாவது ஒளிந்திருக்கும் பகைவன் என்ற நிலையை விட குறைவானதாக இருக்கவில்லை. மேலும் மற்றொரு புறம் பனூ நழீருடனான அனுபவம் இவ்வாறு கூறுகின்றது. அதாவது இந்தப் பாம்பு எப்படிப்பட்டது என்றால் அதனை வீட்டிலிருந்து வெளியேற்றுவதும் எவ்வளவு அபாயகரமானது என்றால், அதனை வீட்டில் இருக்க விடுவதைப் போன்ற அளவிலானது ஆகும்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் எம்.ஏ (ரலி) அவர்களின் நூல் - ஸீரத் காத்தமுன் நபிய்யீன், பக்கம் 595 - 596)

எவ்வாறு இருப்பினும் அதற்கு முடிவு கட்டுவதற்காக பனூ குறைழாவிற்கு எதிராகவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அந்த நடவடிக்கை துல்கஅதா மாதம், ஐந்தாம் ஹிஜ்ரீ மற்றும் ஏப்ரல் மாதம், கி.பி 627-ம் ஆண்டு நிகழ்ந்தது என்று கூறப்படுகின்றது. திருக்குர்ஆனிலும் இது தொடர்பாக குறிப்பு வருகின்றது.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் எம்.ஏ (ரலி) அவர்களின் நூல் - ஸீரத் காத்தமுன் நபிய்யீன், பக்கம் 597)

அல்லாஹ் கூறுகின்றான்:

وَاَنْزَلَ الَّذِيْنَ ظَاهَرُوْهُمْ مِّنْ اَهْلِ الْكِتٰبِ
مِنْ صَيَاصِيْهِمْ وَقَذَفَ فِيْ قُلُوْبِهِمُ الرُّعْبَ
فَرِيْقًا تَقْتُلُوْنَ وَتَأْسِرُوْنَ فَرِيْقًا
وَاَوْرَثَكُمْ اَرْضَهُمْ وَدِيَارَهُمْ
وَاَمْوَالَهُمْ وَاَرْضًا لَّمْ
تَطَـُٔوْهَا ۚ وَكَانَ اللّٰهُ عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرًا

பொருள்:

வேதத்தையுடையவர்களுள் அ(ந்தப் போரைத் தொடுத்த)வர்களுக்கு உதவி செய்தவர்களை அவர்களின் கோட்டைகளிலிருந்து (அல்லாஹ்)இறக்கி விட்டான். மேலும் அவர்களின் உள்ளங்களில் திகிலை ஏற்படுத்தினான். நீங்கள் சிலரைக் கொன்று விட்டீர்கள். மற்றுஞ் சிலரை சிறைப்பிடித்தீர்கள்.

அவர்களின் பூமிக்கும், அவர்களின் வீடுகளுக்கும், அவர்களின் செல்வங்களுக்கும், இதுவரை காலடி எடுத்து வைக்காத பூமிக்கும் அவன் உங்களை வாரிசு ஆக்கினான். அல்லாஹ் எல்லாவற்றிற்கும் பேராற்றல் பெற்றவனாவான்.

(அல் அஹ்ஸாப் : 27 - 28)

பனூ குறைழாவைக் குறித்த சுருக்கமான அறிமுகம் இதுவாகும். அதாவது, பனூ குறைழா என்பது யூதர்களின் ஒரு கோத்திரமாகும். இவர்கள் மதீனாவிற்கு அருகில் சில மைல் தொலைவில் ஓர் உறுதியான கோட்டையில் வந்து இறங்கியிருந்த குறைழாவின் சந்ததிகள் ஆவர். பின்னர் இவர்கள் இதே பெயரால் அழைக்கப்படத் துவங்கினர். பனூ குறைழா மற்றும் பனூ நழீர் இருவரும் சகோரர்களாக இருந்தனர். அவர்களுக்கு ஹஸ்ரத் ஹாரூன் (அலை) அவர்களின் சந்ததிகளுடன் தொடர்பு இருந்தது. ஒருவரின் சந்ததி பனூ குறைழா என்று அழைக்கப்பட்டது. மற்றொருவரின் சந்ததி பனூ நழீர் என்றழைக்கப்பட்டது. (தாரீகுல் இஸ்லாம் வ வஃபியாதுல் மஷாஹீர் வல் அஃலாம், பக்கம் 320, தாருல் கிதாபில் அரபி, 1990-ம் ஆண்டு)




இந்தப் போரின் பின்னணி கடந்த குத்பாக்களிலும் கூறப்பட்டிருந்தது. மேலும், அகழ் போரின் விளக்கத்திலும் இந்த விஷயம் இடம் பெற்றிருந்தது. அதாவது, பனூ குறைழா சரியாக போர் நடைபெற்று கொண்டிருந்த தருணத்தில் உடன்படிக்கையை முறித்தவாறு முஸ்லிம்களுக்கு எதிராக குறைஷியர்களுக்கு உதவி செய்திருந்தனர். மேலும், அவர்களுக்கும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்கும் இடையில் செய்யப்பட்டிருந்த அந்த உடன்படிக்கைகளை அவர்கள் முறித்து விட்டனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அகழ்ப் போர் முடிந்து விட்டப் பிறகு வருகை தந்தார்கள். அப்போது அன்னார் (ஸல்) மற்றும் ஸஹாபிகள் ஆயுதங்களை களைந்திருந்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் வீட்டிற்குள் சென்றார்கள். மேலும் தண்ணீர் கொண்டு வரும்படி கூறினார்கள். மேலும், தனது தலையை கழுவத் தொடங்கினார்கள்.

ஓர் அறிவிப்பில் இவ்வாறு உள்ளது. அதாவது, அன்னார் (ஸல்) நீராடினார்கள். மேலும் வாசனைத் திரவியம் கேட்டார்கள். லுஹர் தொழுகையை நிறைவேற்றினார்கள். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஒரு நபர் எங்களுக்கு ஸலாம் கூறினார். அப்போது நாங்கள் வீட்டில் இருந்தோம். அவர் குரல் கொடுத்த போது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் விரைவாக அவரை நோக்கி சென்றார்கள். மேலும், நான் கதவு வழியாக பார்த்துக் கொண்டிருந்தேன். அங்கு ஹஸ்ரத் திஹ்யஃ கல்பீ (ரலி) அவர்கள் இருந்ததைக் கண்டேன். அன்னார் (ரலி) தமது முகத்திலிருந்த தூசியை துடைத்துக் கொண்டிருந்தார்கள். மேலும் அன்னார் (ரலி) தலைப்பாகை அணிந்திருந்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சவாரி விலங்கின் கழுத்தின் மீது சாய்ந்தவாறு நின்று கொண்டிருந்தார்கள். அவர் கூறினார்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் ஆயுதத்தை களைந்து விட்டீர்கள்; அல்லாஹ்வின் மீது ஆணையாக! நாங்கள் ஆயுதங்களை கீழே இறக்கி வைக்கவில்லை.

மற்றோர் அறிவிப்பில் இந்த சொற்கள் உள்ளன. அதாவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எதிரியை எதிர் கொண்டதில் இருந்து வானவர்கள் ஆயுதங்களை கீழே வைக்கவில்லை. மேலும், தற்போதும் கூட நாங்கள் அஹ்ஸாபை பின்தொடர்ந்து சென்ற பிறகு திரும்பி வந்து கொண்டிருக்கின்றோம். வானவர்கள் ஆயுதங்களை கீழே வைக்கவில்லை ; எந்த அளவுக்கு என்றால், நாங்கள் ஹம்ராஉல் அஸத் வரை சென்றடைந்து விட்டோம்; அல்லாஹ் அவர்களை தோற்கடித்து விட்டான் ; இனி தாங்கள் இந்தப் பக்கம் நோக்கி செல்லுங்கள் என்று அவர் கூறினார். அதற்கு எங்கே? என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அதற்கு, அவர் அங்கே ;அதாவது பனூ குறைழாவின் பக்கம் என்று அவர் சைகை செய்து கூறினார்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

நான் உள்ளே திரும்பி வந்து விட்டேன்; அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் வருகை தந்தபோது, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் எந்த நபருடன் உரையாடிக் கொண்டிருந்தீர்களோ அவர் யார்? என்று நான் கேட்டேன். அன்னார் (ஸல்) கூறினார்கள்: நீங்கள் அவரை பார்க்கவில்லையா?. அதற்கு நான் ஆம் (பார்த்தேன்) என்று நான் கூறினேன். நீங்கள் அவரை எந்த நபருடன் ஒப்புமை காண்கின்றீர்கள்? என்று அன்னார்(ஸல்) கேட்டார்கள். அதற்கு, நான் ஹஸ்ரத் திஹ்யஃ கல்பீ (ரலி)அவர்களுடன் ஒப்புமை இருக்கின்றது என்று நான் கூறினேன். இவர்கள் ஜிப்ராயீல் ஆவார்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

வானவர்கள் ஆயுதங்களை இறக்கி வைக்கவில்லை என்ற அந்த விஷயம் இங்கு வெளிப்பட்டு விடடது.

நான் பனூ குறைழாவின் பக்கம் சென்று கொண்டிருக்கின்றேன் என்று கூறிக் கொண்டிருந்த இந்த நபர் ஜிப்ராயீலாக இருந்தார்கள்.பனூ குறைழாவின் பக்கம் புறப்படுங்கள்; நாம் அஸ்ர் தொழுகையை அங்கே சென்று தொழுவோம் என்று இறைத் தூதர் (ஸல்) அவர்கள் அப்பொழுதே அறிவிப்பு செய்யுயம்படி செய்தார்கள்.

ஆக, செவிமடுத்த உடனேயே ஸஹாபிகள் வேகமாக புறப்படத் துவங்கி விட்டனர். ஸஹாபிகளின் கட்டுப்படுதலின் நிலை இவ்வாறாக இருந்தது. வழிப் பாதையில் அஸ்ர் தொழுகைக்கான நேரம் வந்தது. மேலும் தொழுகைக்கான நேரம் முடிந்து விடுவது அருகில் இருந்தது. அப்போது சில ஸஹாபிகளோ, தொழுகைக்கான நேரம் செல்கின்றது; எனவே தொழுது விட வேண்டும் என்று எண்ணி தொழுது விட்டனர். மேலும், புகாரீயின் விளக்கவுரையான ஷரஹுல் பாரீயை பொருத்த வரை, அஸ்ர் தொழுகையை பனூ குறைழாவிற்கு சென்று தொழ வேண்டும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியிருக்கின்றார்கள்; எனவே தொழுகை (நேரம்) சென்றால் செல்லட்டும்; நாங்கள் அங்கு சென்றுதான் நிறைவேற்றுவோம் என்று சில ஸஹாபிகள் கூறினர்.

அறிவிப்பின் அடிப்படையில், இந்தக் கூட்டத்தினர் சூரியன் மறைந்து விட்ட பிறகு தான் இவர்கள் சென்றடைந்தனர். மேலும், அந்நேரத்தில் அங்கு சென்று அஸ்ர் தொழுகையை நிறைவேற்றினார்கள். மேலும், இறைத் தூதர் (ஸல்) அவர்கள் இரண்டு கூட்டத்தினரையும் ஒன்றும் கூறவில்லை. தொழுகை வீணாகி விடும் என்ற அச்சத்தால் வழிப் பாதையில் தொழுதுவிட்ட கூட்டத்தினரையும் ஒன்றும் கூறவில்லை ; மேலும், எவர்கள் சூரியன் மறைந்ததற்குப் பிறகு பனூ குறைழவிற்கு சென்று தொழுகையை நிறைவேற்றினார்களோ அவர்களையும் ஒன்றும் கூறவில்லை. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை அழைத்தார்கள். மேலும், அன்னாரிடம் படையின் கருப்பு நிற இகாப் எனும் பெயர் கொண்ட கொடியை கொடுத்தார்கள். (ஸஹீஹ் புகாரீ, கிதாபுல் மகாஸீ, ஹதீஸ் எண்: 4117)

இதன் விளக்கம் ஸஹீஹ் புகாரீயின் விரிவுரை மற்றும் வேறு சில வரலாற்று நூல்களிலும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. கூடுதல் விளக்கம் இவ்வாறு ஆகும். அதாவது, முதன் முதலில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை ஒரு குழுவினருடன் முன்னால் அனுப்பி வைத்தார்கள். மேலும், பின்னர் தான் சுயமே அவர்களுக்குப் பின்னால் புறப்பட்டு விட்டார்கள்.

(ஷரஹ் ஸூர்கானீ அலல் மவாஹிபுலுத் துன்யா, பாகம் 3, பக்கம் 68 - 69, தாருல் குதுபில் இல்மியா,1996)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் இது தொடர்பாக இவ்வாறு எழுதுகின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அகழ்ப் போரை முடித்து விட்டு நகரத்திற்கு திரும்பி வருகை தந்தபோது, அன்னார் (ஸல்) அப்போதுதான் ஆயுதங்கள் போன்றவற்றை கழற்றி விட்டு நீராடுவதை முடித்திருந்தார்கள். அந்நிலையில், அன்னாருக்கு இறைவன் புறமிருந்து ஆன்மிகக் காட்சியின் வடிவில் இந்த விஷயம் கூறப்பட்டது. அதாவது, பனூ குறைழாவுடைய நம்பிக்கை துரோகம் மற்றும் கிளர்ச்சி குறித்து முடிவு எடுத்திடாத வரை நீங்கள் ஆயுதங்களை கழற்றி இருக்கக் கூடாது; மேலும், நீங்கள் தாமதிக்காமல் பனூ குறைழாவை நோக்கி புறப்பட்டுச் செல்லுங்கள் என்று அன்னாருக்கு பின்னர் வழிகாட்டல் வழங்கப்பட்டது. எனவே, அனைவரும் பனூ குறைழாவுடைய கோட்டையை நோக்கிப் புறப்படுங்கள்; மேலும் அஸ்ர் தொழுகையை அங்கே சென்றடைந்து நிறைவேற்றலாம் என்று அன்னார் (ஸல்) ஸஹாபா பெருமக்களிடத்தில் பொது அறிவிப்பு செய்தார்கள். (ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்களின் நூல் ஸீரத் காத்தமுன் நபிய்யீன், பக்கம் 597)

முன்னர் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் கூற்றின் அடிப்படையில் இந்த விஷயம் கூறப்பட்டிருந்தது. எவ்வாறு இருப்பினும், ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் எம்.ஏ (ரலி) அவர்களும் எழுதியுள்ளது போன்று இது ஆன்மிகக் காட்சியாக இருந்தது. இந்தக் காட்சியை ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களும் ஆன்மிக் காட்சியின் வடிவில் கண்டிருக்கக் கூடும். மேலும் அவ்வாறு நடந்தும் விடுகின்றது.

பனூ குறைழாவை நோக்கிப் புறப்பட்டதைக் குறித்து இவ்வாறு குறிப்பு கிடைக்கின்றது. அதாவது, இறைத் தூதர் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் இப்னு உம்மு மக்தூம் (ரலி) அவர்களை மதீனாவில் கண்காணிப்பாளராக நியமனம் செய்தார்கள். மேலும், பனூ குறைழாவை நோக்கி புதன்கிழமையன்று புறப்பட்டார்கள். மேலும் துல்கஅதா மாதத்தின் ஏழு நாட்கள் மீதமிருந்தன. இறைத் தூதர் (ஸல்) அவர்கள் ஆயுதங்களையும், கவசங்களையும் சுயமே அணிந்து கொண்டும், கையில் ஈட்டியையும் ஏந்திவிட்டார்கள். மேலும், கழுத்தில் கேடயத்தை தொங்க விட்டார்கள். மேலும் தமது குதிரையான லஹைஃப் மீது ஏறி சவாரி செய்தார்கள். முஸ்லிம்களிடம் 36 குதிரைகள் இருந்தன. இறைத் தூதர் (ஸல்) அவர்கள் தமது ஸஹாபிகளுடன் புறப்பட்டார்கள்.

இப்னு ஸஅது கூறுகின்றார்கள்: அன்னாருடன் மூவாயிரம் நபர்கள் இருந்தனர். ஏற்கனவே கூறப்பட்டது போன்று, ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் முஹாஜிர்கள் மற்றும் அன்ஸார் ஸஹாபிகளின் ஒரு குழுவினருடன் முன்னரே பனூ குறைழா கோத்திரத்தை சென்றடைந்தார்கள். ஹஸ்ரத் அபூ கத்தாதஃ (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நாங்கள் பனூ குறைழாவை சென்றடைந்தோம். மேலும், ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கோட்டையின் கீழே கொடியை நட்டி விட்டார்கள்.(பனூ குறைழா கோத்திரத்தாராகிய) அவர்கள் எங்களைப் பார்த்தபோது, அவர்களுக்கு போருக்கான நம்பிக்கை ஏற்பட்டு விட்டது. பின்னர் அவர்கள் தங்களது கோட்டைகளுக்கு சென்று தாழிட்டுக் கொண்டு இறைத் தூதர் (ஸல்) அவர்கள் மற்றும் அன்னாருடைய பரிசுத்த மனைவிமார்களை ஏசிபேசினார்கள். ஹஸ்ரத் அபூ கத்தாதஃ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நாங்கள் அமைதி காத்தோம். மேலும் அவர்களின் எந்த ஏச்சுப் பேச்சுக்கும் நாங்கள் பதில் கொடுக்கவில்லை. மேலும், இனி உங்களுக்கும் எங்களுக்கும் இடையில் வாள் மட்டுமே தீர்ப்பு எழுதும் என்று கூறினோம். இறைத் தூதர் (ஸல்) அவர்களும் பனூ குறைழா வரை வந்தடைந்துவிட்டார்கள். மேலும், பனூ குறைழாவுடைய மலையடிவாரத்தில் பிஃர் அன்னார் என்ற இடத்தில் அவர்களுடைய கோட்டைக்கு அருகில் தங்கி விட்டார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா, தொகுதி 2, பக்கம் 57, தாருல் குதுபில் இல்மியா, 1990)

அதனை பிஃரே அன்னா என்றும் கூறப்படுகின்றது. மேலும், இது பனூ குறைழாவின் கிணறுகளில் ஒரு கிணறு ஆகும். (முஃஜமுல் பல்தான், தொகுதி 1, பக்கம் 365. தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத்)

இது குறித்த விளக்கத்தில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் ஸீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூலில் இவ்வாறு எழுதியுள்ளார்கள்: ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அங்கு சென்றடைந்தார்கள். பனூ குறைழா தனது நம்பிக்கை துரோகம் மற்றும் கிளர்ச்சியின் மீது வெட்கத்தை வெளிப்படுத்தி மன்னிப்பு மற்றும் கருணையை வேண்டுவதற்கு பகரமாக பகிரங்கமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஏசி பேசினர் ; மேலும், உச்சபட்ச வெட்கக் கேடான மற்றும் அநாகரீகமான வழிமுறையின் கீழ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூய மனைவிமார்கள் தொடர்பாகவும் மிகவும் அநாகரீகமான வார்த்தைகளில் பேசினர்.

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களும், அன்னாருடைய படையினரும் புறப்பட்டுச் சென்ற சிறிது நேரத்திற்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் ஆயுதங்களை ஏந்தியவாறு மதீனாவிலிருந்து புறப்பட்டு விட்டார்கள். அந்நேரத்தில் அன்னார் (ஸல்) குதிரையின் மீது சவாரி செய்திருந்தார்கள். மேலும், ஸஹாபிகளின் ஒரு பெரும் கூட்டம் அன்னாருடன் இருந்தது. அன்னார் (ஸல்) பனூ குறைழாவின் கோட்டைகளுக்கு அருகில் சென்றடைந்தபோது, ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களோ சற்று தொலைவு முன்பு வரை அன்னாரை வரவேற்பதற்காக திரும்பி

MUNEEF
TRADING COMPANY
IRON & STEEL MERCHANT
Y. Jafarullah
+91 97104 19554
+91 79047 15716
89/11, Shanmugapuram
5th (6th Corner) Street
Thiruvotriyur, Chennai 19
muneefsteeltc@gmail.com
GSTN: 33ALSPJ9110D1Z9

வந்திருந்தார்கள்.

அன்னார் (ரலி) கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! என்னைப் பொருத்த வரை தாங்கள் நேரடியாக இங்கு வருகை தருவதற்கு அவசியம் இல்லை; நாங்கள் இன்ஷா அல்லாஹ் போதுமானவர்கள் ஆவோம். இதனை அன்னார் (ஸல்) புரிந்து கொண்டார்கள். மேலும், பனூ குறைழா என்னைக் குறித்து ஏதாவது ஏசி பேசினார்களா என்ன? என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள். அப்போது ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அழுது கொண்டிருந்ததை அன்னார் (ஸல்) கண்டார்கள்.

நிச்சயமாக ஏதோ தவறான விஷயங்களை அவர்கள் பேசியிருப்பார்கள்.

ஆம்! அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! என்று ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கூறினார்கள். அதற்கு பரவாயில்லை ; செல்லுங்கள் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

قَدْ أُوْذِيَ مُوْسٰى بِأَكْثَرَ مِنْ هٰذَا

பொருள்: மூஸாவிற்கு இந்த மக்களின் புறமிருந்து இதை விடவும் அதிகமான துன்பம் ஏற்பட்டு வந்தது.

சுருக்கமாக, அன்னார் (ஸல்) முன்னேறி சென்றார்கள். மேலும் பனூ குறைழாவின் ஒரு கிணற்றை அடைந்து அங்கு முகாமிட்டு விட்டார்கள். (ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் எம்.ஏ (ரலி) அவர்களின் நூல் - ஸீரத் காத்தமுன் நபிய்யீன், பக்கம் 597 - 598)

ஓர் அறிவிப்பின் அடிப்படையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம் கூறினார்கள்: வேதனையடைவதற்கு எந்த விஷயமும் இல்லை ; எனக்கு முன்னால் என்னை ஏசி பேசுவதற்கு இவர்களுக்கு துணிவு கிடையாது. மேலும் மிகவும் அமைதியுடனும், கண்ணியத்துடனும் முன்னால் சென்றார்கள்.

(ஸுபுலுல் ஹுதா வர் ரஷாத், பாகம் 5, பக்கம் 5 -6, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் பதிப்பு, 1993-ம் ஆண்டு)

இந்தப் போரில் முஸ்லிம்களின் உணவு குறித்தும் இவ்வாறு குறிப்பு கிடைக்கின்றது. அதாவது, அனைத்து ஸஹாபிகளும் இஷா வரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் ஒன்றுகூடி விட்டார்கள். மேலும், ஹஸ்ரத் ஸஅத் பின் உபாதா (ரலி) அவர்கள் பேரீத்தம் பழங்களை சுமந்து செல்லும் ஓர் ஒட்டகத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்றும் முஸ்லிம்களுக்காக அனுப்பி வைத்தார்கள்.

அந்த நாளன்று, பேரீத்தம் பழம் எவ்வளவு சிறந்த உணவு ஆகும்! என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(ஸுபுலுல் ஹுதா வர் ரஷாத், பாகம் 5, பக்கம் 6, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் பதிப்பு, 1993-ம் ஆண்டு)

பனூ குறைழாவை முஸ்லிம்கள் முற்றுகையிட்டது தொடர்பான விளக்கம் இவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அதாவது, இறைத் தூதர் (ஸல்) அவர்கள் ஸஹ்ரீ நேரத்தில் முன்னோக்கிச் சென்றார்கள். மேலும், அம்பு எய்யக் கூடியப் படையினரை முன்னால் நிறுத்தினார்கள். அவர்கள் யூதர்களின் கோட்டைகளை சுற்றி வளைத்து விட்டார்கள். மேலும், அவர்கள் மீது அம்புகளை எய்தார்கள். மேலும், கற்களைப் பொழிந்தார்கள். மேலும் யூதர்களும் தங்களது கோட்டைகளுக்குள் இருந்து கொண்டு அம்புகளை எய்து கொண்டிருந்தனர். எந்த அளவுக்கென்றால் மாலைப் பொழுதாகிவிட்டது. பின்னர் கோட்டைகளுக்கு அருகில் இரவைக் கழித்தார்கள். மேலும், முஸ்லிம்கள் யூதர்கள் மீது மாறி மாறி தாக்குதல் தொடுத்து வந்தனர். இறைத் தூதர் (ஸல்) அவர்கள் அவர்கள் மீது தொடர்ச்சியாக அம்புகளை எய்தும்படி செய்து கொண்டிருந்தார்கள். எந்த அளவுக்கு என்றால், யூதர்களுக்கு தங்களின் அழிவு உறுதி என்ற நம்பிக்கை ஏற்பட்டு விட்டது. மேலும், முஸ்லிம்களின் மீது அம்புகளை எய்துவதை நிறுத்தி விட்டனர். மேலும், எங்களை விட்டு விடுங்கள் ; நாங்கள் உங்களுடன் பேச்சுவார்த்தை நடத்த விரும்புகின்றோம் என்று அவர்கள் கூறத் தொடங்கினர். அப்போது, ஆகட்டும்! என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். யூதர்கள் நப்பாஷ் பின் கைஸ் என்பவரை அன்னாரிடத்தில் அனுப்பி வைத்தனர்.

பனூ நழீர் இங்கிருந்து சென்று விட்டதைப் போன்று நாங்கள் இங்கிருந்து சென்று விடுவதற்கு எங்களுக்கு அனுமதி தாருங்கள்; தாங்கள் செல்வங்களையும், ஆயுதங்களையும் பெற்றுக் கொள்ளுங்கள்; மேலும், எங்களை கொலை செய்யாமல் விட்டு விடுங்கள்; நாங்கள் தங்களது நகரத்திலிருந்து எங்களது பெண்கள் மற்றும் பிள்ளைகளுடன் வெளியேறி சென்று விடுவோம் என்று அவர் கூறினார். இது யூதர்கள் தரப்பிலிருந்து முன்வைக்கப்பட்ட கோரிக்கை ஆகும். எங்களது ஓர் ஒட்டகம் எதனை சுமக்க முடியுமோ அது எங்களது பொருட்களாக இருக்கும் என்று அவர் கூறினார். ஆனால், இறைத் தூதர் (ஸல்) அவர்கள் அதனை நிராகரித்து விட்டார்கள். பின்னர், ஓர் ஒட்டகம் சுமக்கும் அளவுக்கு கூட எங்களுக்கு எங்களின் பொருட்கள் தேவை இல்லை என்று நப்பாஷ் கூறினார். அதனை அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் மறுத்து விட்டார்கள். மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தீர்மானத்திற்கு ஏற்ப நீங்கள் செயல்பட வேண்டும் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். ஆனால், அவர் இறைத் தூதர் (ஸல்) அவர்களின் தீர்ப்பின்படி செயல்படுவதற்கு மறுத்து விட்டார். மேலும், தமது சமுதாயத்தினரிடம் திரும்பி சென்று விட்டார்.

(ஸுபுலுல் ஹுதா வர் ரஷாத், பாகம் 5, பக்கம் 6, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத், பதிப்பு 1993-ம் ஆண்டு)

இதன் பிறகு பனூ குறைழாவின் தலைவர்கள் பரஸ்பரம் தங்களுக்குள் ஆலோசனை செய்தார்கள். அப்போது, நப்பாஷ் தமது சமுதாயத்திடம் திரும்பிச் சென்று அவர்களுக்கு அனைத்து நிலவரங்களைக் குறித்தும் தெரிவித்தார். மேலும், முற்றுகை நீண்டு கொண்டு செல்லத் தொடங்கியது. அப்போது, பனூ குறைழாவின் தலைவர் கஅப் பின் அஸத் தமது சமுதாயத்தின் மக்களை விளித்து அவர்களிடம் கூறினார்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! உங்கள் மீது ஒரு சோதனை வந்துள்ளது. அதனை நீங்கள் பார்த்துக் கொண்டு இருக்கின்றீர்கள். நான் உங்களுக்கு முன்னால் மூன்று விஷயங்களை எடுத்து வைக்கின்றேன் ; அவற்றில் நீங்கள் எதனை விரும்புவீர்களோ அதனை ஒப்புக் கொள்ளுங்கள்.

அவை என்ன? என்று அவர்கள் கேட்டனர். அதற்கு, கஅப் பின் அஸத் கூறினார்:

நாம் முஹம்மது (ஸல்) அவர்களின் கீழ்ப்படிதலை மேற்கொண்டு விடுவோம்; மேலும், அன்னாரை உண்மையாளர் என ஒப்புக் கொண்டு விடுவோம். ஏனெனில், அல்லாஹ்வின் மீது ஆணையாக! அவர் நபியாக ஆக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளார் என்பது உங்களுக்கு தெரிந்து விட்டது. எவரைக் குறித்து நீங்கள் உங்கள் வேதங்களில் படிக்கின்றீர்களோ அந்த நபர் இவரே ஆவார். மேலும், நாம் ஈமான் கொண்டு விடுவதன் காரணத்தினால் உங்களது உயிரும், உங்களது உடைமையும், உங்களது பெண்களும் பாதுகாக்கப்பட்டு விடுவர். இறைவன் மீது ஆணையாக! முஹம்மது (ஸல்) அவர்கள் நபி ஆவார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். அவர் அரேபியர்களை சார்ந்தவராக இருக்கின்றார்; மேலும் பனீ இஸ்ராயீலை சேர்ந்தவராக அவர் இல்லை என்ற விஷயம் மட்டுமே நம்மை அவர்களுடன் இணைவதிலிருந்து தடுக்கின்றது. ஆக, அவர் தற்போது எங்கே இருந்தாலும் அல்லாஹ்தான் அவரை நபியாக ஆக்கியிருக்கின்றான். அதாவது அவர் யாராக இருந்தாலும் தற்போது அவரையே அல்லாஹ் நபியாக அனுப்பியுள்ளான். இது மிகவும் தெளிவான விஷயம் ஆகும். மேலும் நானோ உடன்படிக்கையை முறிப்பதைக் கூட விரும்பியிருக்கவில்லை தான்; ஆனால், இந்த சோதனையும், துன்பமும் இந்த ஹுயை பின் அக்தபின் காரணத்தினால் ஆகும் என்று அவர் கூறினார். அவன் அருகில் அமர்ந்து கொண்டிருந்தான்.

பின்னர் கஅப் கூறினார்: இப்னு ஜவ்வாஸ்; இந்த யூதர் பண்டைய ஓர் ஆலிமாக இருந்தார். அவர் உங்களிடம் வந்திருந்த போது உங்களிடம் என்ன கூறியிருந்தார்? என்று உங்களுக்கு நினைவிருக்கின்றதா? அவர் இவ்வாறு கூறியிருந்தார்; நான் மது, மற்றும் பேரீத்தம் பழத்தின் பூமியை அதாவது பைத்துல் முகத்தஸை விட்டு விட்டேன்; மேலும் நான் தண்ணீர் மற்றும் பேரீத்தம் பழத்தின் நிலத்திற்கு வந்து விட்டேன். அவ்வாறு ஏன் (செய்தீர்கள்) ? என்று மக்கள் கேட்டனர்.

கஅப் பின் அஸத் கூறினார்: அந்த முதியவர் கூறினார்: இந்த ஊரிலிருந்து ஒரு நபி தோன்றுவார்; மேலும், நான் அந்த நேரத்தில் உயிருடன் இருந்தால் பின்னர் நான் அவரைப் பின்பற்றுவேன்; மேலும் அவருக்கு உதவி செய்வேன். மேலும் அவர் எனக்குப் பிறகு வந்தால் நீங்கள் மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டும். அவர் குறித்து எவரும் உங்களை ஏமாற்றத்திற்கு ஆளாக்கி விடக் கூடாது. அதாவது நீங்கள் அவரை ஏற்றுக் கொள்ள வேண்டும். நிராகரித்து விடக் கூடாது. அவரைப் பின்பற்ற வேண்டும். மேலும் அவருக்கு உதவி செய்ய வேண்டும். மேலும் அவரது நண்பராக ஆகிவிட வேண்டும். நானோ இரண்டு வேதங்களின் மீதும் நம்பிக்கை கொண்டுள்ளேன்; முந்தைய வேதத்தின் மீதும் ; மற்றும் இறுதி வேதத்தின் மீதும். அதாவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மீது இறங்கிய வேதத்தின் மீதும். மேலும் என்னுடைய ஸலாத்தை அவருக்கு எட்ட வைத்து விடுங்கள்; மேலும், நான் அவரை உண்மைப்படுத்தியிருந்தேன் என்று அவரிடம் கூறிவிடுங்கள்.

பின்னர் கஅப் கூறினார்: வாருங்கள்! நாம் முஹம்மது (ஸல்) அவர்களைப் பின்பற்றி நடப்போம்; மேலும் அவரை உண்மைப்படுத்துவோம்.

இதனைக் கேட்ட பனூ குறைழா

கோத்திரத்தினர், நாங்கள் தவ்ராத்தின் தீர்ப்பையே ஏற்போம். அதாவது மூஸாவின் வேதமாகிய தவ்ராத் என்ன தீர்ப்பளித்துள்ளதோ அதிலிருந்து ஒருபோதும் விலக மாட்டோம். மேலும் அதனை வேறு எந்த வேதத்தைக் கொண்டும் ஒருபோதும் மாற்ற மாட்டோம் என்று கூறத் தொடங்கினர்.

அப்போது, கஅப் கூறினார்: நீங்கள் எனது கூற்றை ஏற்காவிட்டால் பின்னர் இரண்டாவது விஷயம் இதுவாகும்; அதாவது, வாருங்கள், நாம் நமது பிள்ளைகளையும், பெண்களையும் கொன்று விட்டு பின்னர் வாளேந்திக் கொண்டு முஹம்மது (ஸல்) அவர்கள் மீதும் அன்னாருடைய தோழர்கள் மீதும் தாக்குதல் தொடுப்போம். நமக்குப் பின்னால் எந்த சுமையும் இருக்காது. எந்த அளவுக்கு என்றால் அல்லாஹ் நமக்கும் முஹம்மது (ஸல்) அவர்களுக்கும் இடையில் தீர்ப்பு வழங்கி விடுவான். நாம் கொல்லப்பட்டால் பின்னர் நாம் மட்டுமே மடிவோம். நமக்குப் பின்னால் எந்த சந்ததியும் இருக்காது. நாம் வெற்றிப் பெற்று விட்டால் எனது வயதின் மீது ஆணையாக! நமக்கோ வேறு மனைவிமார்கள் கிடைத்துவிடுவார்கள்; மக்கள் கூறினர்: நாம் இந்த வறியவர்களை கொலை செய்வதா? இவர்களுக்குப் பிறகு வாழ்வில் என்ன இன்பம் எஞ்சியிருக்கும்? என்று மக்கள் கேட்டனர். பின்னர், கஅப் கூறினார்: நீங்கள் என்னுடைய இந்த விஷயத்தையும் ஏற்றுக் கொள்ளவில்லை என்றால், பின்னர் கேளுங்கள்; இன்றைய இரவு சனிக்கிழமை அதாவது ஸப்த் தினம் ஆகும். மேலும், முஹம்மது (ஸல்) அவர்கள் மற்றும் அன்னாருடைய தோழர்கள் இன்றைய இரவில் நம்மைப் பற்றி பொருட்படுத்தாதவர்களாக இருப்பர். எனவே நீங்கள் அவர்கள் மீது தாக்குதல் நடத்தி விடுங்கள்; நாம் முஹம்மது (ஸல்) அவர்களையும், அன்னாரது தோழர்களையும் ஏமாற்றிவிடக் கூடும். அதற்கு அவர்கள் கூறினர்: நாம் நமது ஸப்த் தினத்தை நாசமாக்க வேண்டுமா? மேலும் நமக்கு முன்னால் எவரும் செய்யாத விஷயத்தை நாம் செய்வதா? நீர் அறிந்த அதனைத் தவிர ;

இவ்வாறு கஅபுடைய மூன்று விஷயங்களில் எதனையும் ஒப்புக் கொள்வதற்கு அவர்கள் மறுத்து விட்டனர். கஅபிற்குப் பிறகு மற்றொரு யூதர் அம்ர் பின் ஸுஃதா கூறினார்: யூதக் கூட்டமே! நீங்கள் முஹம்மது (ஸல்) அவர்களுடன் உடன்படிக்கை செய்தீர்கள்; மேலும், உங்களுக்கும் அவர்களுக்கும் இடையில் இருந்த அந்த உடன்படிக்கையை முறித்து விட்டீர்கள்; மேலும் உங்களுடைய அந்த உடன்படிக்கையில் நான் பங்கேற்கவுமில்லை ; உங்களுடன் உங்களுடைய ஏமாற்று வேலையில் நான் பங்கேற்கவுமில்லை. நீங்கள் அவர்களுடைய மார்க்கத்தில் இணைவதை நிராகரித்து விட்டீர்கள் என்றால் பின்னர் யூத மதத்திலாவது நிலைத்திருங்கள்; அவர்களை நீங்கள் நிராகரிக்கின்றீர்கள் என்றால், பின்னர் யூத மதத்தின் போதனைகளின்படியாவது நிலைத்திருங்கள். மேலும் அவர்களுக்கு ஜிஸ்யா வரியை செலுத்தி விடுங்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக! அவர்கள் இதனை ஒப்புக் கொள்வார்களா? மாட்டார்களா? என்பதை நான் அறியேன்.

எங்களை விடுதலை செய்து கொள்வதற்காக அரேபியர்களுக்கு எங்களால் வரி செலுத்த முடியாது என்று அவர்கள் கூறினர். இது நடக்க முடியாது. நாங்கள் இதனை கொடுக்க மாட்டோம். இதை விட கொலையுண்டு விடுவதே சிறந்ததாகும். அப்போது, அப்படியென்றால் நான் உங்களிடமிருந்து விலகிக் கொள்கிறேன். என்று அமர் கூறினார். அவர் அதே இரவிலேயே கோட்டைய விட்டு வெளியேறி விட்டார். அவர் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் பாதுகாவலர்களை கடந்து சென்றார். ஹஸ்ரத் முஹம்மது பின் முஸ்லமா (ரலி), அவர்கள் மீது கண்காணிப்பாளராக இருந்தார்கள். யார் நீ? என்று அன்னார்(ரலி) கேட்டார்கள். அதற்கு, அம்ர் பின் ஸுஃது! என்று அவர் கூறினார். செல்லும்! என்று ஹஸ்ரத் முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்கள் கூறினார்கள். மேலும்

اَللّٰهُمَّ لَا تَحْرِمْنِيْ
اِقَالَةَ عَثَرَاتِ الْكِرَامِ

என்று கூறினார்கள்.

பொருள்: அல்லாஹ்வே! என்னை கண்ணியமிக்கவர்களின் தவறுகளின் மீது திரையிடக் கூடிய நற்செயலில் இருந்து இழப்பிற்குரியவராக ஆக்காதீர் என்று கூறி அவரது பாதையை விட்டு விட்டார்கள். மேலும், அவர் அங்கிருந்து புறப்பட்டு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் மஸ்ஜிதிற்கு சென்று விட்டார். மேலும், அங்கேயே இரவைக் கழித்தார். மேலும், அதிகாலை நேரத்தில் அவர் அங்கிருந்து சென்று விட்டார். அவர் எங்கே சென்றார் என்று அறிய முடியவில்லை. அவரைப் பற்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன்னால் கூறப்பட்டபோது, அவர் எப்படிப்பட்ட நபர் என்றால், அவரது நன்றியுணர்வின் காரணமாக அல்லாஹ் அவருக்கு இரட்சிப்பு வழங்கி விட்டான் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஸுபுலுல் ஹுதா வர் ரஷாத், பாகம் 5, பக்கம் 6 - 8, தாதுல் குதுபில் இல்மியா பெய்ரூத், 1993-ம் ஆண்டு)

இதே போன்று கஅபுடைய இந்த விஷயங்களைச் செவிமடுத்து மேலும் மூன்று நபர்கள் அதே இரவில் கோட்டையை விட்டு வெளியேறினர். மேலும் இஸ்லாத்தை தழுவினர். மேலும் தங்களது உயிரையும், குடும்பத்தையும் மேலும் தமது செல்வங்களையும் பாதுகாத்துக் கொண்டனர்.

(ஸுபுலுல் ஹுதா வர்ரஷாத், பாகம் 5, பக்கம் 6 -8, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத், 1993-ம் ஆண்டு)

ஹஸ்ரத் அபூ லுபாபஃ (ரலி) அவர்களின் சம்பவம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இது குறித்து இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: தற்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கோட்டைகளின் மீது சிக்கல்களை அதிகரித்து விட்டார்கள். அவர்கள் மீதான முற்றுகையால் அவர்கள் இன்னலுக்கு ஆளானபோது, அவர்கள் ஸப்த் இரவில் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் இந்த தூதுச் செய்தியை அனுப்பினார்கள். அதாவது, ஹஸ்ரத் லுபாபஃ பின் அப்தில் முன்ஸிர் (ரலி)அவர்களை எங்களிடம் அனுப்புங்கள் ; நாங்கள் எங்களது விவகாரத்தில் அவரிடம் ஆலோசனை செய்து கொள்வதற்கு ஏதுவாக அவ்வாறு செய்யுங்கள் என்றனர். இவர்கள் பனூ குறைழாவின் நட்புக் கோத்திரமான அவ்ஸ் கோத்திரத்தின் ஒரு கண்ணியமிக்க நபராக இருந்தார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அன்னாரை அனுப்பி வைத்தார்கள். அவர்கள் ஹஸ்ரத் லுபாபஃ (ரலி) அவர்களைக் கண்ட போது, ஆண்கள் அன்னாரை நோக்கி வரத் தொடங்கினர் ; மேலும் பெண்களும், குழந்தைகளும் அன்னாருக்கு முன்னால் கதறி அழுதனர். ஹஸ்ரத் லுபாபஃ (ரலி) அவர்கள் அவர்கள் மீது மென்மை காட்டினார்கள். அன்னாருடைய உள்ளத்தில் அவர்கள் மீதான மென்மை உருவானது. இந்தத் திட்டத்தை அவர்கள் வகுத்திருந்தனர். கஅப் பின் அஸத் கூறினார்: லுபாபாவே, நாங்கள் உம்மை மட்டுமே தேர்ந்தெடுத்துள்ளோம். நிச்சயமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது தீர்மானத்தை ஏற்றுக் கொள்ள வைப்பதைத் தவிர்த்து வேறு எந்த விஷயத்திற்கும் தயாராக இல்லை. உமது எண்ணம் என்ன? நாங்கள் அன்னாருடைய தீர்ப்பை ஏற்றுக் கொள்வதா? அதற்கு, ஆம்! என்று ஹஸ்ரத் லுபாபஃ (ரலி) கூறினார்கள். மேலும் தமது கரத்தால் தமது கழுத்தின் பக்கம் அறுப்பதற்கான சைகை செய்தார்கள். இவ்வாறு கழுத்தின் மீது கையை செலுத்தினார்கள்.

ஹஸ்ரத் லுபாபஃ (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக, எனது பாதம் இன்னும் அதன் இடத்தில் தான் இருந்தது. நான் அல்லாஹ் மற்றும் அவரது தூதருக்கு துரோகம் செய்துவிட்டதாக உணர்ந்தேன். நான் ஏன் இந்த சைகையை செய்தேன்? என்று நான் மிகவும் வெட்கமடைந்தேன். மேலும்,

اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْن

என்று கூறினேன். நான் கீழே இறங்கினேன். அப்போது எனது தாடி கண்ணீரால் நனைந்து இருந்தது. மக்கள் நான் திரும்பி வருவதற்காக காத்திருந்தனர். நான் கோட்டையின் பின்புறமிருந்து வேறொரு வழிப்பாதையில் சென்றேன். மேலும் மஸ்ஜிதிற்கு சென்று விட்டேன். மேலும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் செல்லவில்லை. நான் என்னை நானே தூணில் கட்டி வைத்துக் கொண்டேன். தண்டனை கொடுக்கும் விதமாக அவ்வாறு கட்டிக் கொண்டேன். நான் மரணித்து விடாத வரை அல்லது எனது அந்த செயலின் மீதான தவ்பாவை அல்லாஹ் ஒப்புக் கொள்ளாத வரை இங்கிருந்து நான் அகல மாட்டேன் என்று நான் கூறினேன். நான் பனூ குறைழாவின் நிலத்தின் மீது ஒருபோதும் நான் கால் வைக்கவும் மாட்டேன்; மேலும் எங்கு நான் அல்லாஹ் மற்றும் அவனது தூதருக்கு நம்பிக்கை துரோகம் செய்தேனோ அந்த ஊரை நான் பார்க்கவும் மாட்டேன். நான் வந்து விட்ட தகவலும், எனது இந்த செயலைப் பற்றிய செய்தியும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்கு கிடைத்த போது அன்னார் (ஸல்) கூறினார்கள்: அவரை விட்டு விடுங்கள்; மேலும் அல்லாஹ் அவரைக் குறித்து என்ன விரும்புவானோ தீர்ப்பு வழங்குவான். அவர் என்னிடத்தில் வந்திருந்தால் நான் அவருக்காக இஸ்திஃக்ஃபார் செய்திருப்பேன். அவர் என்னிடம் வரவில்லை ; மேலும் அவர் சென்று விட்டார் எனவே அவரை விட்டு விடுங்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் லுபாபஃ (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் மிகுந்த துன்பத்தில் இருந்தேன். பல இரவுகள் வரை நான் ஒன்றும் உண்ணவில்லை ; மேலும் எதுவும் பருகவில்லை. மேலும், நான் இதே நிலையில் தான் இருப்பேன் ; எந்த அளவுக்கு என்றால் ஒன்று, நான் உலகை விட்டு பிரிந்து விடுவேன் அல்லது அல்லாஹ் எனது தவ்பாவை ஒப்புக் கொள்ள வேண்டும் என்றே நான் கூறிக் கொண்டிருந்தேன். அப்போது, நான் கண்ட எனது கனவை ஞாபகப்படுத்திப் பார்த்தேன். அதாவது

நாங்கள் பனூ குறைழாவை முற்றுகையிட்டிருந்தபோது நான் அதனைக் கண்டிருந்தேன்.(அந்தக் கனவில்) நான் அசுத்தமான கருமை நிற மண்ணில் இருந்தேன். மேலும், என்னால் அதிலிருந்து வெளியேற முடியவில்லை. அதன் துர்நாற்றத்தால் நான் மரணிக்க இருந்தேன். பின்னர் நான் ஒரு நதியைக் கண்டேன்; மேலும் அதில் நான் நீராடினேன்; எதுவரை என்றால் நான் தூய்மையாகி விட்டேன் பின்னர் நான் நறுமணத்தை உணர்ந்தேன். நான் அதற்கான விளக்கத்தை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் கேட்டபோது, அன்னார் (ரலி) கூறினார்கள்: நீர் எப்படிப்பட்ட ஒரு விவகாரத்தில் ஈடுபடுவீர் என்றால் அதன் காரணமாக நீர் துன்பத்திற்குள்ளாவீர். பின்னர் உமக்கு இரட்சிப்பு கிடைத்து விடும் என்று கூறினார்கள். ஆக, நான் கட்டப்பட்ட நிலையில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுடைய அந்தக் கூற்றை நினைவு கூர்ந்தேன். மேலும், அல்லாஹ் எனக்காக தவ்பாவை இறக்கி விடுவான் என்று நான் நம்பிக் கொண்டிருந்தேன்;

அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: நான் அதே நிலையிலேயே இருந்தேன். எதுவரை என்றால் பலவீனத்தின் காரணமாக குரலைக் கூட என்னால் செவி மடுக்க முடியாமல் போனது. தூணில் கட்டப்பட்டிருந்தேன். இறைத் தூதர் (ஸல்) அவர்கள் என்னை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

இப்னு ஹிஷ்ஷாம் கூறுகின்றார்கள்: அன்னார் ஆறு இரவுகள் வரை கட்டப்பட்டிருந்தார்கள். இறுதியில் அபூ லுபாபஃ (ரலி) அவர்களின் தவ்பா தொடர்பாக அல்லாஹ் வசனத்தை இறக்கினான்.

وَاٰخَرُوْنَ اعْتَرَفُوْا بِذُنُوْبِهِمْ

خَلَطُوْا عَمَلًا صَالِحًا وَّاٰخَرَ سَيِّئًا ؕ

عَسَى اللّٰهُ اَنْ يَّتُوْبَ عَلَيْهِمْ ؕ

اِنَّ اللّٰهَ غَفُوْرٌ رَّحِيْمٌ

பொருள்:

தங்கள் பாவச் செயல்களை ஏற்றுக் கொண்ட வேறு சிலரும் உள்ளனர். இவர்கள் நல்ல செயல்களை வேறு சில தீய செயல்களுடன் கலந்து விட்டனர். அல்லாஹ் அவர்களுக்கு அருள் செய்து விடலாம். அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும், மேன் மேலும் கருணை காட்டுபவனுமாவான்.(அத்தவ்பா: 102)

ஹஸ்ரத் அபூ லுபாபஃ (ரலி) அவர்களின் தவ்பா தொடர்பாக அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்கு ஸஹ்ரீ நேரத்தில் வசனம் இறங்கியது. அன்னார் (ஸல்) அப்போது ஹஸ்ரத் உம்மு ஸலமா (ரலி) அவர்களின் வீட்டில் இருந்தார்கள். ஹஸ்ரத் உம்மு ஸலமா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஸஹ்ரீ நேரத்தில் நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் புன்சிரித்ததைக் கண்டேன். அப்போது, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தங்களை அல்லாஹ் எப்போதும் புன்சிரித்தவாறே வைப்பானாக! தாங்கள் எதன் காரணமாக புன்னகைத்தீர்கள்? என்று நான் கேட்டேன். அப்போது, லுபாபஃவிற்கு நற்செய்தி உள்ளது! என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நான் அன்னாருக்கு நற்செய்தியை கொடுத்து விடட்டுமா? என்று நான் கேட்டேன். நிச்சயமாக ; நீங்கள் நற்செய்தியை கூறிவிடுங்கள்! என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

பின்னர் அன்னார் (ரலி) தமது அறையின் வாசலில் நின்று கொண்டார்கள். பின்னர் கூறினார்கள்: அபூ லுபாபஃவே! நீர் மகிழ்ச்சி அடைவீராக! அல்லாஹ் உமது தவ்பாவை ஒப்புக் கொண்டு விட்டான்.

மக்கள் அவரை (கட்டுகளிலிருந்து) விடுவிப்பதற்காக அவரை நோக்கி சென்றனர். அப்போது, கூடாது; அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள்தான் கட்டுகளை அவிழ்க்க வேண்டும் ; இல்லையென்றால் நான் இதே நிலையில் தான் இருப்பேன் என்று ஹஸ்ரத் அபூ லுபாபஃ (ரலி) அவர்கள் கூறினார்கள். கூறினார்கள்:

நானோ தற்போது கட்டப்பட்டுள்ளேன். தற்போது அவிழ்த்து விட வேண்டும் என்றால் பின்னர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள்தான் அவிழ்க்க வேண்டும். பின்னர் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஃபஜ்ர் தொழுகைக்காக வருகை தந்தபோது, தமது அருளுக்குரிய கரத்தால் அவரை (கட்டுகளிலிருந்து) விடுவித்தார்கள். அப்போது, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எனது தவ்பா என்பது இதுவாகும். அதாவது, நான் எனது சமுதாயத்தின் எந்த வீடுகளில் என்னிடம் இருந்து பாவம் வெளிப்பட்டதோ அந்த வீடுகளையும் விட்டு விடுவேன்; மேலும் நான் எனது அனைத்து செல்வங்களையும் அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் வழியில் ஸதகாவாக கொடுத்து விடுவேன் என்பதாகும். அதற்கு, அபூ லுபாபஃவே! நீர் மூன்றில் ஒரு பங்கை கொடுப்பதே உமக்கு போதுமானது ஆகும் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

(ஸுபுலுல் ஹுதா வர்ரஷாத், பாகம் 5, பக்கம் 8 - 9, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத், 1993-ம் ஆண்டு)

எவ்வாறு இருப்பினும், இதனை தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். அதாவது ஹஸ்ரத் லுபாபஃ (ரலி) அவர்களைக் குறித்து மேலே எடுத்துரைக்கப்பட்ட சம்பவத்தின் விளக்கம் என்பது ஸிஹாஹ் ஸித்தாவில் கிடைக்கவில்லை. மக்களை கொலை செய்வதற்கான சைகை என்பது அன்னாருடைய சொந்த எண்ணத்தின் விளைவாக இருந்திருக்கக் கூடும். ஆனால், எவ்வாறு இருப்பினும், வரலாற்றில் இந்தக் குறிப்பு இடம் பெற்றுள்ளது.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்களும் இந்த சம்பவத்தின் விளக்கத்தை இவ்வாறு எடுத்துரைத்துள்ளார்கள். அன்னார் (ரலி) எழுதுகின்றார்கள்:

இறுதியில், பனூ குறைழாவுக்கு எதிரான முற்றுகையின் கடுமையினால் அவர்கள் இன்னலுக்கு ஆளானார்கள்.அப்போது, அவர்கள் இந்த திட்டத்தை வகுத்தனர். அதாவது, தங்களுடன் (நல்ல) தொடர்பு வைத்துள்ள மற்றும் தனது எளிமையின் காரணமாக தங்களின் அழுத்தத்திற்கு ஆளாகக் கூடிய ஒரு முஸ்லிமை தங்களது கோட்டைக்குள் அழைக்க வேண்டும் என்று திட்டம் வகுத்தனர். மேலும், தங்களைக் குறித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் எண்ணம் என்ன? என்பதை அவரிடமிருந்து அறிந்து கொள்ள வேண்டும்; மேலும் அதன் ஒளியில் எதிர்காலத் திட்டங்களை வகுக்க வேண்டும் என்பது அவர்களின் திட்டமாக இருந்தது. எனவே அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் ஒரு தூதுவரை அனுப்பி வைத்து, அபூ லுபாபஃ பின் முன்ஸிர் அன்ஸாரி (ரலி) அவர்களை எங்களது கோட்டையில் அனுப்பி வைக்க வேண்டும் ; அப்போதுதான் அவரிடம் நாங்கள் ஆலோசனை செய்ய முடியும் என்று அவர்கள் விண்ணப்பம் வைத்தனர். அன்னார் (ஸல்) அபூ லுபாபஃ (ரலி) அவர்களுக்கு அனுமதி நல்கிவிட்டார்கள். மேலும் அன்னார் (ரலி) அவர்களின் கோட்டையில் சென்று விட்டார்கள். அப்போது பனூ குறைழாவின் தலைவர்கள் இவ்வாறு திட்டம் தீட்டியிருந்தார்கள். அதாவது, அபூ லுபாபஃ (ரலி) அவர்கள் கோட்டையினுள் வந்த உடன் அனைத்து யூதப் பெண்களும், குழந்தைகளும் கதறி அழ வேண்டும்; மேலும், அன்னாரைச் சுற்றி சூழ்ந்து விட வேண்டும் ; மேலும் தங்களது இன்னல்களையும், துன்பங்களையும் குறித்து அன்னாரது உள்ளத்தில் முழுமையாக தாக்கம் ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்ய வேண்டும். ஆக, அபூ லுபாபஃ (ரலி) அவர்கள் மீது இந்த அழுத்தம் ஏற்பட்டு விட்டது. மேலும் அன்னார் (ரலி) கோட்டையினுள் சென்ற உடனேயே, அவர்களின் துன்பத்திற்கு இரையாகி விட்டார்கள். மேலும், அபூ லுபாபஃவே! நீர் எங்களது நிலையைப் பார்த்துக் கொண்டிருக்கின்றீரா? நாங்கள் முஹம்மது (ஸல்) அவர்களின் தீர்ப்பிற்கு கட்டுப்பட்டு எங்களது கோட்டையிலிருந்து வெளியே வரட்டுமா? என்ற பனூ குறைழாவின் இந்தக் கேள்விக்கு , ஆம்! என்று கூறினார்கள். மேலும், ஆனால், அத்துடன் தமது கழுத்தில் கையை செலுத்தி, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உங்களை கொலை செய்வதற்கு கட்டளை வழங்குவார்கள் என்று சைகை செய்தார்கள். இவ்வாறு அபூ லுபாபஃ (ரலி) அவர்கள் தன்னையுமறியாமல் இந்தப் பதிலைக் கொடுத்தார்கள்.

உண்மையில் இது முற்றிலும் தவறானதாக இருந்தது. மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒருபோதும் அப்படிப்பட்ட எந்த எண்ணத்தையும் வெளிப்படுத்தி இருக்கவில்லை. ஆயினும், அவர்களின் துன்பத்தின் வெளிப்பாட்டினால் தாக்கத்திற்கு ஆளாகி லுபாபஃ (ரலி) அவர்களின் எண்ணம் வேதனை மற்றும் துன்பத்தின் ஓட்டத்தில் எப்படி ஓடியது என்றால், மரணம் ஓலம் நிற்கவில்லை. மேலும் லுபாபஃ அவர்களின் இந்த தவறான அனுதாபம் பனூ குறைழாவின் அழிவிற்கு காரணியாக அமைந்து விட்டது. மேலும், நாங்கள் முஹம்மது (ஸல்) அவர்களின் தீர்ப்பின்படி செயல்பட மாட்டோம் என்ற பிடிவாதத்தில் அவர்கள் உறுதியாகி விட்டனர். ( ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் எம்.ஏ (ரலி) அவர்களின் நூல் - ஸீரத் காத்தமுன் நபிய்யீன், பக்கம் 598 - 599)

எவ்வாறு இருப்பினும் இந்த விளக்கம் தொடர்கின்றது. இன்ஷா அல்லாஹ்! எஞ்சிய விஷயங்கள் எதிர்வரும் நாட்களில் (தொடரும்).

பாகிஸ்தான் அஹ்மதிகள் சுயமே தங்களுக்காக துஆ செய்ய வேண்டும். இன்றைய நாட்களில் அவர்களுக்கு அதிக துன்பங்களை இழைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக அவர்களுக்கு முன்னரை விட அதிகம் முயற்சி செய்ய வேண்டும். ஏனெனில் நிலைமைகள் மிக மிக மோசமாகிக் கொண்டே சென்று கொண்டிருக்கின்றன. நான் கூறியது போன்று, அல்லாஹ் அருளும், கருணையும்

*திருக்குர்ஆனிலிருந்து...*

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

புரிவானாக!

இதே போன்று உலகில் (வெளி நாடுகளில்) வசிக்கக் கூடிய பாகிஸ்தானிய அஹ்மதிகள் இருக்கின்றனர்; அவர்களும் குறிப்பாக தங்களது பாகிஸ்தானி சகோதரர்களுக்காக துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களுக்கு கஷ்டங்களிலிருந்து இரட்சிப்பு வழங்குவானாக. இதே போன்று, வங்காளதேசத்தின் அஹ்மதிகளுக்காகவும் துஆ செய்யுங்கள். மேலும் அவர்கள் தங்களுக்காக சுயமே துஆ செய்ய வேண்டும். எல்லாத் தீங்கிலிருந்து அவர்களை பாதுகாப்பானாக. அங்கும் அஹ்மதிகள் மிகவும் இன்னல்களுக்கு ஆளாகியுள்ளனர். அல்ஜீரியாவின் அஹ்மதிகளுக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களையும் எல்லாத் தீங்குகளிலிருந்தும் பாதுகாப்பானாக. அவர்கள் மீது அபாரதமும், சிறைத் தண்டனையும் விதிக்கப்படுகின்றன. அவர்களும் சிறைபிடிக்கப்பட்டு வருகின்றார்கள். அவர்களின் ஈமானை அல்லாஹ் உறுதிப்படுத்துவானாக. சூடானுடைய அஹ்மதிகளும் அங்குள்ள போர் சூழல்களின் காரணமாக மோசமான சூழ்நிலைகளில் இருக்கின்றனர். அவர்களுக்காகவும் துஆ செய்யுங்கள்.

எல்லா இடத்திலும் கலிமா கூறுபவர்கள் கலிமா கூறுபவர்களின் கைகளால் இன்னல்களுக்கு ஆளாகியுள்ளனர். இதன் காரணமாகவே இஸ்லாத்தின் எதிரிகளான அந்நியர்கள் தயக்கமின்றி முஸ்லிம்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கின்றனர். அதிகம் துஆ செய்யுங்கள்.

அல்லாஹ்வால் இஸ்ரேல் அரசாங்கம், அமெரிக்க அரசாங்கம் மற்றும் வல்லரசுகளின் கைகளை தடுக்க முடியும். அவனது கையில் அனைத்து சக்தியும் உள்ளது. ஆனால், அதற்காக முஸ்லிம்களும் தமது செயலை அல்லாஹ்வின் திருப்திக்கு ஏற்ப அமைத்துக் கொள்ள வேண்டும். மேலும் அனைவரும் சகோதரர்களாக ஆகிவிட்டதற்கான முன்மாதிரியை வெளிப்படுத்த வேண்டும். தென்பட்டுக் கொண்டிருக்கும் பரஸ்பரம் தங்களுக்குள் இருக்கும் கருத்து வேறுபாடுகளுக்கு முடிவு கட்ட வேண்டும். அப்போதுதான் அல்லாஹ்வின் உதவிக்கான வாக்குறுதியும் முழுமை பெறும். அதுவன்றி ஒன்றும் நடக்காது. ஒரு நம்பிக்கையாளராக திகழ்ந்து முஸ்லிம்கள் வசிக்க வேண்டும். அல்லாஹ் நமக்கும், அனைத்து முஸ்லிம்களுக்கும் அதற்கான நற்பேறை வழங்குவானாக!

(அல்ஃபஸ்ல் இன்டர் நேஷனல், நவம்பர் 01, 2024, பக்கம் 2 - 7)

தமிழாக்கம்

மவ்லவி A.அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * * *

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

**1- ம் பக்கத் தொடர்ச்சி.... (மல்ஃபூஸாத்)**

உரிமை கிடையாது. அத்தகைய நபர் கருத்துக் கூறினால் அவர் முட்டாள் மற்றும் அறிவீனர் என்றழைக்கப்பட மாட்டாரா? நிச்சயமாக (அவ்வாறே) அழைக்கப்படுவார். இன்னும் கூறப்போனால், மற்ற அறிஞர் பெருமக்களோ, முட்டாளே! உனக்கு ஒன்றுமே தெரியாத போது, பின்னர் நீ எப்படி கருத்து கூறுகின்றாய்? என்று கூறி அவரை அவமானத்திற்கு ஆளாக்கி விடுவர். இதே போன்று, இறைவனைக் குறித்து அவன் இல்லை என்று கூறுகின்றவர்கள் இருக்கின்றனர் ; அவர்கள் கருத்து கூறுவதற்கு அவர்களுக்கு என்ன உரிமை இருக்கின்றது? ஏனெனில், இறைவனைப் பற்றிய அறிவே அவர்களுக்கு இருப்பதில்லை. மேலும், அவர்கள் ஒருபோதும் (அவனை அடைவதற்கு) கடும் முயற்சிகளை செய்ததுமில்லை.

ஆனால், அவர்கள் ஏக இறைவனை வணங்கக் கூடிய ஒருவரின் கூற்றிற்கு ஏற்ப உண்மையைத் தேடுவதில் அடியெடுத்து வைத்து, இறைவனைத் தேடினால் பின்னர் அவர்களுக்கு அந்த உரிமை இருக்கும். அவ்வாறு இறைவனைத் தேடி அவர்களுக்கு இறைவன் கிடைக்கவில்லை என்றால், பின்னர் இறைவன் இல்லை என்று நிச்சயமாக அவர்கள் கூறிக் கொள்ளட்டும். ஆனால், அவர்களோ எந்த முயற்சியும் செய்யவில்லை ; மேலும் (இறை வழியில்) கடும் உழைப்பும் எதுவும் செய்யவில்லை . அவ்வாறிருக்க அவர்களுக்கு (இறையிருப்பை) நிராகரிக்கின்ற உரிமை இல்லை.

சுருக்கமாக, இறைவனின் இருப்பு இருக்கின்றது. அது எப்படிப்பட்ட ஒரு விஷயம் என்றால், எந்த அளவிற்கு அதன் மீதான ஈமான் அதிகரித்துக் கொண்டு செல்லுமோ அதே அளவிற்கு (மனிதனுக்கு) ஆற்றல் கிடைக்கின்றது. மேலும், அந்த மறைவிலும் மறைவான இருப்பு தென்படத் துவங்கி விடுகின்றது. எதுவரை என்றால், அந்த நபர் வெளிப்படையாக பார்த்துக் கொள்கின்றார். பின்னர் இந்த ஆற்றல் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே செல்கின்றது. இந்த ஒரு விஷயத்தை மட்டுமே உலகம் தேட வேண்டும். ஆனால், இன்று உலகில் இந்த ஆற்றல் இருக்கவில்லை.

(மல்ஃபூஸாத், தொகுதி 2, பக்கம் 28, காதியான் பதிப்பு 2018-ம் ஆண்டு)

* * * * * * * *

**1- ம் பக்கத் தொடர்ச்சி.... (தஃப்ஸீரே கபீர்)**

அடித்தார்கள். மேலும் அது கீழே விழுந்து உடைந்து விட்டது. அப்போது,அபூஸுஃப்யானை நோக்கி, அபூஸுஃப்யானே! நீ உஹது போர் நாளன்று எவ்வளவு ஆணவத்துடன் ஹுபுல் தெய்வத்தின் மகிமை ஓங்குக! ஹுபுல் தெய்வத்தின் மகிமை ஓங்குக! என்று முழக்கமிட்டாய்! அது உனக்கு நினைவிருக்கின்றதா? என்று ஒரு ஸஹாபி கேட்டார்.

இன்று பார்த்துக் கொள்! உமது கண்களுக்கு முன்னால் ஹுபுல் துண்டு துண்டாக உடைந்து கிடக்கின்றது. அபூஸுஃப்யான் மிகவும் அச்சத்திற்குள்ளாகி, சகோதரரே! இந்த விஷயங்களை விட்டு விடும்; முஹம்மது (ஸல்) அவர்களின் இறைவனைத் தவிர வேறு தெய்வங்கள் இருந்திருந்தால் பின்னர் இன்று நாங்கள் எவற்றையெல்லாம் கண்டு கொண்டிருக்கின்றோமோ அவை ஒருபோதும் நிகழ்ந்திருக்காது. எனவே ஏக இறைவனைத் தவிர வேறு எந்த இறைவனும் இல்லை என்று எங்களுக்கு உறுதி ஏற்பட்டு விட்டது.

சுருக்கமாக, اَلْمُلْكُ يَوْمَئِذٍ لِّلّٰهِ

என்ற முன்னறிவிப்பு அந்த நாளில் மிகவும் பொலிவுடன் நிறைவேறி விட்டது. மேலும் அரேபியாவின் ஒரு மூலையிலிருந்து மற்றொரு மூலை வரை لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ என்ற குரல்கள் ஒலிக்கத் துவங்கி விட்டன.

பின்னர்

فَالَّذِيْنَ اٰمَنُوْا وَعَمِلُوا الصّٰلِحٰتِ فِيْ جَنّٰتِ النَّعِيْمِ وَالَّذِيْنَ كَفَرُوْا وَكَذَّبُوْا بِاٰيٰتِنَا فَاُولٰٓئِكَ لَهُمْ عَذَابٌ مُّهِيْنٌ

என்ற வசனத்தில் அல்லாஹ் கூறுகின்றான்: இறை இயக்கங்களின் முன்னேற்றங்களில் ஷைத்தான் எவ்வளவுதான் தடைகளை ஏற்படுத்தினாலும், எவ்வவு தான் அவன் சதித் திட்டங்களை தீட்டினாலும் இறுதியில் அல்லாஹ்வின் நபியே வெற்றி பெறுகின்றார். மேலும் நிராகரிப்பாளர்களின் அனைத்து திட்டங்களும் தோல்வியே அடைகின்றன. ஆக, நம்பிக்கையாளர் என்பவர் முன்னேற்றமடைந்து செல்கின்றார். ஆனால், எதிரிகள் தோல்வியுற்று, செயலிழந்து துன்பம், கோபம் மற்றும் தோல்வி என்ற இழிவின் நெருப்பில் எரிந்து கொண்டே சென்று விடுகின்றார். மேலும், இந்த உலகமே அவர்களுக்கு நரகமாகி விடுகின்றது. اَلْمُلْكُ يَوْمَئِذٍ لِّلّٰهِ என்பதில் ஓர் ஆட்சேபனைக்கு பதிலும் காணப்படுகின்றது. அதாவது சில மக்கள் சூரா ஃபாத்திஹாவின் மாலிக்கி யவ்மித்தீன் என்ற சொற்களின் மீது ஆட்சேபனை செய்தவாறு, அவன் மாலிக் ஆவான் என்று ஏன் கூறப்பட்டுள்ளது? ஏன் அவன் மலிக் என்று கூறப்படவில்லை என்று கூறுகின்றனர். உண்மையில் மலிக் அதாவது அரசனின் அதிகாரம் மாலிக் அதாவது ஆட்சியாளன் என்பதைக் காட்டிலும் அதிகமானதாகும் என்ற இந்த ஆட்சேபனைக்கான பதில் اَلْمُلْكُ يَوْمَئِذٍ لِّلّٰهِ என்பதில் இடம் பெற்றுள்ளது. ஏனெனில், அல்லாஹ் கூறுகின்றான்: அந்த நாளில் ஆட்சி அல்லாஹ்வினுடையதாக மட்டுமாகவே இருக்கும். மேலும், அவன் அவர்களுக்கிடையில் தீர்ப்பு வழங்குவான். ஆக, ஒருவகையில் அல்லாஹ் மாலிக் மட்டுமே கிடையாது. மாறாக, முழுமையான அதிகாரம் படைத்தவன் ஆவான். அதாவது அவன் அரசனும் ஆவான். ஆயினும், இதனால் அவன் இன்றைய ஆட்சியாளர்களைப் போன்று அவன் ஓர் உயர்ந்த சட்டத்திற்கு கட்டுப்பட்டவன் என்பது கிடையாது.

(தஃப்ஸீரே கபீர், தொகுதி 6, பக்கம் 77 - காதியான் பதிப்பு 2010-ம் ஆண்டு)

* * * * * * * *

**நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்**

தொலைபேசி எண் : 1800 103 2131

இந்த *TOLL FREE* எண்ணில்

∴போன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

## ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) **அவர்களின்**

### ஐரோப்பிய சுற்றுப் பயணம் - ஜெர்மனி

நீங்கள் உங்களது கல்வியால் ஆன்மாவின் ஆரோக்கியத்திற்கான ஏற்பாட்டை செய்ய வேண்டும். மற்ற மார்க்கங்களின் போதனைகளை கற்றுக் கொண்டு இஸ்லாத்தின் சிறப்புகளையும், போதனைகளையும் நீங்கள் மக்களுக்கு கூற வேண்டும். நீங்கள் இந்த நகரம் மற்றும் இந்த நாட்டில் இஸ்லாத்தின் தூதுவர்கள் ஆவீர்கள்

உலகை அழிவிலிருந்து எப்படி பாதுகாக்க வேண்டும்? ஒன்று, உலகியல் அல்லது அரசியல் முயற்சிகள் இருக்கின்றன. அதில் நாம் அமைதி, நேசம், அன்பு ஆகியவற்றிற்கான தூதுச் செய்தியை வழங்கிக் கொண்டிருக்கின்றோம்

ஜாமிஆ அஹ்மதிய்யாவில் கல்வி பயின்று கொண்டிருக்கின்ற ஒரு முபல்லிஃக், ஒரு முரப்பி ; அவர் உலகிற்கு அல்லாஹ்வின் இருப்பைப் பற்றிய உணர்வை ஏற்படுத்த வேண்டும். இறைவனுக்கு அருகில் மக்களை கொண்டு வருவதற்கான உங்களது பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டும்

நமது ஒவ்வொரு பணியையும் ஒவ்வொரு செயலையும் வல்ல இறைவன் பார்த்துக் கொண்டிருக்கின்றான் என்ற உணர்வை இதயத்தில் உருவாக்காத வரை உலகில் அமைதியையும், நீதியையும், நேசத்தையும் நிலை பெறச் செய்ய முடியாது. எனவே நீங்கள் எங்கு உலகிற்கு இந்த உணர்வை ஏற்படுத்த உங்களது முயற்சிகளை செய்வீர்களோ அங்கு எல்லாவற்றையும் விட முதலில் நீங்கள் உங்களை அந்த உணர்வு மற்றும் பொறுப்பிற்கு தகுதியுடையவராக ஆக்கிக் கொள்ள வேண்டும்

நீங்கள் வல்ல இறைவனுடன் உங்களது தொடர்பை ஏற்படுத்த வேண்டும். அப்போதுதான் நீங்கள் உண்மையான வடிவில் மற்றவர்களுக்கு கூறமுடியும். இறைவன் யார்? இறைவனது போதனை என்ன? இறைவனுக்கு தனது படைப்பினத்துடன் எவ்வளவு நேசம் இருக்கின்றது? என்பதை மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டும்

(ஜாமிஆ மாணவர்களுக்கு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் வழங்கிய முக்கிய அறிவுரைகள்)

**ஜாமிஆ அஹ்மதிய்யா ஜெர்மனியின் புதிய கட்டடத்திற்கான திறப்பு விழா நிகழ்ச்சி & ஸய்யிதுனா ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஆற்றிய உரை**

**சென்ற இதழின் தொடர்ச்சி...**

**ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுடன் மீடியாவின் பிரதிநிதிகள் மற்றும் பத்திரிகையாளர் சந்திப்பு**

பத்திரிகையாளர் சந்திப்பின் துவக்கத்தில் அச்சு மற்றும் காட்சி ஊடகங்களின் பிரதிநிதிகள் தங்களை அறிமுகம் செய்து கொண்டனர்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் உரையின் ஜெர்மன் மொழியாக்கத்தை கேட்க தவறிய ஒரு பத்திரிகையாளர் இவ்வாறு கூறினார்: எனக்கு ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் உருது மொழியில் நிகழ்த்திய உரை புரியவில்லை.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: எனது உரையின் சாராம்சம் இதுவாக இருந்தது. அதாவது, அஹ்மதிய்யா ஜமாஅத்தைச் சாராத அந்த அனைத்து விருந்தினர்களுக்கும் அவர்கள் இந்த நிகழ்ச்சிக்கு வருகை தந்திருந்ததற்காக நான் முதலில் நன்றி தெரிவித்துக் கொண்டேன். மேலும், பின்னர் நான் மாணவர்களிடம் உரை நிகழ்த்தினேன். மேலும், அவர்களுக்கு நான் அறிவுரை வழங்கினேன். அதாவது அவர்கள் இங்கு இஸ்லாமிய போதனைகளை கற்றுக் கொண்டிருக்கின்றனர். இன்னும் கூறப்போனால் அவர்கள் இஸ்லாமியப் போதனைகளை மட்டும் கற்கவில்லை ; மாறாக, ஏனைய மார்க்கங்களின் போதனைகளையும், மேலும் அவற்றின் ஒப்பீடுகளையும் கற்றுக் கொண்டிருக்கின்றனர். கல்வியை முழுமை செய்த பிறகு அவர்கள் அதன்படி அமல் செய்ய வைக்க வேண்டும். பிறரை அதன் படி செயல்பட வைப்பதற்கு முன் முதலில் அந்தப் போதனையின் அழகிய முன்மாதிரியை நீங்கள் உங்களிடத்தில் வெளிப்படுத்த வேண்டும். அப்போதுதான் மக்களுக்கு சரியான இஸ்லாமிய போதனைகள் என்ன? என்பது தெரிய வரும் என்றும் நான் அவர்களுக்கு அறிவுரை செய்தேன். இது எனது சொற்பொழிவின் சுருக்கமாகும்.

அடுத்து, முஸ்லிம்கள் நீங்கள் பேசுகின்ற அந்த அடிப்படையான விஷயங்கள் எவை? என்று ஒரு பத்திரிகையாளர் கேட்டார்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: இஸ்லாத்தின் அடிப்படை போதனைகள் எந்த வகையிலும் வேறுபட்டவை கிடையாது. இஸ்லாம் ஏக இறைவன் மீது மட்டுமே நம்பிக்கை கொள்கின்றது. மேலும், இஸ்லாம் முஹம்மத் (ஸல்) அவர்களின் மீது நம்பிக்கை கொள்கின்றது. உங்களுடைய பரிசுத்த வேதம் அதாவது திருக்குர்ஆன் மீது உங்களுடைய நம்பிக்கை வலுவானதாக இருக்க வேண்டும் என்று இஸ்லாம் கூறுகின்றது. மேலும், முந்தைய அனைத்து நபிமார்கள் மீதும் உங்களுக்கு உறுதியான நம்பிக்கை இருக்க வேண்டும் என்று இஸ்லாம் கூறுகின்றது. மேலும் முந்தைய அனைத்து நபிமார்களின் வேதங்களின் மீதும் நீங்கள் நம்பிக்கை கொள்ள வேண்டும் என்று இஸ்லாம் கூறுகின்றது. நீங்கள் அனைத்து மார்க்கங்களுக்கும் மரியாதை செலுத்துங்கள் என்று இஸ்லாம் கூறுகின்றது. நீங்கள் சமூகத்தில் சகோதரத்துவம், அன்பு மற்றும் அமைதியை பரவச் செய்யுங்கள் என்று இஸ்லாம் கூறுகின்றது.இவை அனைத்தும் திருக்குர்ஆனிலும், ஹதீஸ்களிலும் எழுதப்பட்டுள்ளது. மேலும் இறைத் தூதர் (ஸல்) அவர்களின் கூற்றுகளிலிருந்தும் எங்களுக்கு இந்த விஷயங்களுக்கான கட்டளை கிடைக்கின்றது. ஆக, இதுதான் எங்களது கொள்கைகள் ஆகும். மேலும், நாங்கள் இதன்படியே செயல்பட்டு வருகின்றோம். ஆனால், சில முஸ்லிம்களின் பிரிவுகள் இந்த போதனைகளின்படி அமல் செய்வதில்லை என்பதை நீங்கள் காண்பீர்கள்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: இதேபோன்று, நாங்கள் இவ்வாறு வாதம் செய்கின்றோம். அதாவது, இஸ்லாத்தின் தோற்றுனர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்)அவர்களின் முன்னறிவிப்பிற்கிணங்க, 1400 வருடங்களுக்குப் பிறகு, முஸ்லிம்கள் இஸ்லாத்தின் அசல் போதனைகளை மறந்து விட்டிருப்பர்; மேலும் மீண்டும் அந்த காலத்தில் முஸ்லிம்களும், உலகத்தின் அனைத்து மக்களுக்காவும் ஒரு சீர்திருத்தவாதி தோன்றுவார்; அவரது பெயர் மஸீஹே மவ்வூத் மற்றும் மஹ்தியே மவ்வூத் என்பதாக இருக்கும். ஆக, அவர் தோன்றும் போதோ இஸ்லாத்தின் அசல் போதனைகளை எடுத்து வைப்பார். மேலும் திருக்குர்ஆனின் போதனைகளுக்கான சரியான விளக்கத்தை அவர் வழங்குவார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அவர் தோன்றியதும் அவரை ஏற்றுக் கொள்ள வேண்டும் ; அவருக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும்; மேலும் அவரது கட்டளைகளின்படி முழுமையாக அமல் செய்ய வேண்டும்.

மேலும், அந்த நபர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானி (அலை) அவர்களின் வடிவில் வந்துவிட்டார் என்பது அஹ்மதிகளாகிய எங்களின் நம்பிக்கை ஆகும். மேலும் நாங்கள் அன்னார் மீது நம்பிக்கை கொண்டுள்ளோம். மேலும் ஹஸ்ரத் குலாம் அஹ்மத் காதியானி (அலை) அவர்கள் 1889-ல் அஹ்மதிய்யா ஜமாஅத்தை நிறுவினார்கள். மேலும் 1908-ல் அன்னாரின் மரணம் நிகழ்ந்தது. அன்னாருடைய மரணத்திற்குப் பிறகு, கிலாஃபத் அமைப்பு நிலை பெற்றது. மேலும்,

நாங்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எடுத்துரைத்த இஸ்லாத்தின் அந்த அசல் போதனைகளின்படி செயல்படுவதற்கு முயற்சி செய்து வருகின்றோம். அன்னார் (அலை) தோன்றியதன் நோக்கத்தை நான் எனது சொற்பொழிவில் எடுத்துரைத்து விட்டேன். அதாவது அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: அன்னார் முழு உலகையும் அருகில் கொண்டுவருவதற்காக வந்துள்ளார்கள். அதாவது, அனைத்து மனிதர்களும் ஒருவர் மற்றவரின் உரிமைகளை புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக அன்னார் (அலை) வருகை தந்துள்ளார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மேலும் கூறுகின்றார்கள்: அனைத்து மார்க்கப் போர்களையும் முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்பதே அன்னாரின் வருகையின் நோக்கமாகும். ஏனெனில், இந்த காலம் மார்க்கப் போர்களுக்கான காலம் கிடையாது. எந்த மார்க்கமும் இஸ்லாத்திற்கு எதிராக போர் செய்து கொண்டிருக்கவில்லை.

ஒரு நிருபர் கூறினார்: நான் வெளியில் ஒரு வாக்கியத்தை படித்தேன். LOVE FOR ALL HATRED FOR NONE என்பது அந்த வாக்கியம் ஆகும். அது எனது கவனத்தை மிகவும் ஈர்க்கக் கூடியதாக உள்ளது. இது ஓர் எளிமையான வாக்கியம் ஆகும். ஆயினும், நீங்கள் உங்களது நாவினால் இந்த வாக்கியத்திற்கு விளக்கம் அளிக்க முடியுமா?

ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) கூறினார்கள்: இதன் பொருள் இவ்வாறாகும். அதாவது, எங்களுக்கு எவருக்கு எதிராகவும் பகையையும், பொறாமையும், வெறுப்பும் கிடையாது. மனிதனாக இருப்பதனால் ஒருவர் மற்றவருக்கு கண்ணியம் அளிக்க வேண்டும். மேலும் நீங்கள் அனைத்து மனிதர்களுக்கும் உரிய உரிமைகளை செலுத்த வேண்டும்.

ஜங் தினசரி நாளிதழ் நிருபர் ஒருவர் கூறினார்: எனது கேள்வி ஜாமிஆ தொடர்பானதாகும். இது தனியார் (கல்வி) நிறுவனமாக இருக்குமா? அல்லது ஜெர்மன் அரசாங்கம் அல்லது வேறு ஒரு துறையின் சார்பாக உதவி பெறக் கூடியதாக இருக்குமா?

ஹுஸுர் அன்வர் கூறினார்கள்: நீங்கள் எனது உரையை கவனமாகக் கேட்டிருந்தால் ; நாங்கள் வெளியிலிருந்து எவ்வகையான உதவியும் பெறுவதில்லை ; எங்களிடத்தில் எண்ணெய் வளத்தின் செல்வம் கிடையாது; எங்களது அமைப்பை நடத்தும் பொருட்டு பெரும் தொகையை பெறுவதற்காக எங்களிடம் பெரும், பெரும் வணிகங்கள் கிடையாது என்பதை நான் கூறியிருந்தேன். அஹ்மதிய்யா ஜமாஅத் தனது அனைத்துப் பணிகளையும் தியாகங்களின் மூலமாகவே முழுமை செய்கின்றது; எங்களது பள்ளிவாசல்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பொருள் தியாகத்தினால் கட்டப்படுகின்றன என்பதையும் நான் கூறியிருந்தேன். இதேபோன்று, பல்வேறு வகையான மிஷன்களும், இந்த ஜாமிஆவும் கட்டப்பட்டுள்ளது. பெரும் தொகை செலவிடப்பட்டுள்ளது.இது போன்ற பெரும் பெரும் புரோஜக்ட்கள் முழுமை செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இது அல்லாஹ்வின் மாபெரும் அருளாகும் என்று தான் நான் கூறவேண்டும். அஹ்மதிகளாகிய நாங்கள் அரசாங்க நிறுவனங்கள் அல்லது அமைப்புகள் சார்பாக செலவிடப்படுகின்ற தொகையில் பத்தில் ஒரு பங்கை செலவிட்டுதான் இது போன்ற புரோஜக்ட்களை முழுமை செய்கின்றோம். எனவே இந்த முழு ஜாமிஆவும் ஜெர்மன் அஹ்மதிகளுடைய பொருள் தியாகங்களினால் தனிப்பட்ட முறையில் முழுமை செய்யப்பட்டிருக்கின்றது. எந்த அளவிற்கு என்றால், ஒரு பென்னி பைசா கூட ஜெர்மனிக்கு வெளியிலிருந்து பெறப்படவில்லை.

அந்த நிருபர் கூறினார்: எனது இரண்டாவது கேள்வி என்னவென்றால், ஜெர்மனுடைய யூனிவர்ஸிட்டிகளில் இஸ்லாமிய போதனைகளை கற்பிக்கக் கூடிய நிறுவனத்தை அமைக்கும் நடைமுறை துவங்கி இருக்கின்றது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரும் இதே போன்ற நிறுவனம் தொடங்கப்பட்டிருந்தது. அதற்கும் அநேகமாக இதே பெயர் தான் இருந்தது. அதாவது இஸ்லாமிய போதனைகள் என்ற பெயரே சூட்டப்பட்டிருந்தது. இந்த நிறுவனங்கள் இருக்கும்பட்சத்தில் உங்களுக்கு தனியாக ஒரு நிறுவனத்தை உருவாக்குவதற்கான தேவை ஏன் உணரப்பட்டது?

ஹுஸுர் அன்வர் கூறினார்கள்: இது அதே பெயர் கொண்டதல்ல. மாறாக, எங்களுடைய இந்த நிறுவனத்தின் பெயர் ஜாமிஆ அஹ்மதிய்யா ஆகும். மேலும் ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: நான் முன்னர் ஒரு நிருபரின் கேள்வியில் இதற்கான பதில் வழங்கியுள்ளேன்: அதாவது முஸ்லிம்களிடம் இஸ்லாத்தின் அசல் போதனைகளின்படி அமல் இருக்காது என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன்னறிவிப்பு செய்திருந்தார்கள். ஆக, அந்த காலத்தில் மஸீஹ் மவ்வூத் மற்றும் இமாம் மஹ்தி தோன்றுவார்கள்; அன்னார் இஸ்லாத்தின் சரியான மற்றும் உண்மையான போதனையை வழங்குவார்கள் என்று முன்னறிவிப்பும் செய்யப்பட்டிருக்கின்றது. எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த முன்னறிவிப்புகளுக்கு ஏற்ப இமாம் மஹ்தி (அலை) மற்றும் மஸீஹே மவ்வூத் (அலை) அவர்கள் தோன்றியுள்ளார்கள். மேலும் அன்னார் (அலை) இஸ்லாத்தின் மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார்கள். மேலும் இஸ்லாத்தின் உண்மையான போதனைகளை எடுத்துரைத்தார்கள். எனவே நாங்கள் இதனை உணர்கின்றோம். அதாவது எங்களுக்கு வழங்கப்படுகின்ற போதனைகளும், விளக்கங்களும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கு ஏற்ப சரியானவையாகவும், உண்மையானவையாகவும் இருக்கின்றன என்பதை நாங்கள் உணர்கின்றோம். ஆனால், மற்ற (கல்வி) நிறுவனங்களில் நாம் இதுபோன்ற போதனைகளை பெற முடியாது. இரண்டாவது விஷயம் என்னவென்றால், ஜாமிஆ அஹ்மதிய்யாவின் பாடத் திட்டம் மிகவும் பலதரப்பட்ட வகையான பாடத் திட்டம் ஆகும். நாங்கள் திருக்குர்ஆன், ஹதீஸ், மார்க்கங்களுடைய ஒப்பீடு, பல்வேறு வகையான மார்க்கங்களின் வரலாறு, மற்றும் உலக வரலாறையும் கற்பிக்கின்றோம். மற்ற அந்த (கல்வி) நிறுவனங்களில் என்ன கற்பிக்கப்படுகின்றது ? என்பதை நான் அறியேன். சிலமுறை அவர்கள் சார்பாக செய்யப்படும் தஃப்ஸீர்கள் திருக்குர்ஆனுடைய அசல் தஃப்ஸீர்களிலிருந்து விலகி விடுகின்றன. உதாரணமாக, இன்றைய காலத்தில் மிக முக்கியமான தலைப்பு ஜிஹாது ஆகும். நாங்கள் கூறுகின்றோம்: முஸ்லிம் அல்லாதவர்கள் முஸ்லிம்களை இஸ்லாத்தின் போதனைகளின்படி அமல் செய்வதிலிருந்து தடுக்க வேண்டும் என்பதற்காக இஸ்லாத்தின் மீது தாக்குதல் தொடுத்துக் கொண்டிருந்தனர்; இந்த தாக்குதல்கள் மற்றும் அநீதிகளின் விளைவாக முஸ்லிம்கள் மக்காவிலிருந்து மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்து சென்றனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து ஹிஜ்ரத் செய்து சென்ற பிறகு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து ஹிஜ்ரத் செய்து சென்ற பிறகு, மக்கத்து தலைவர்கள் புறமிருந்து தான் முஸ்லிம்களுக்கு எதிராக முதலில் போர் தொடுக்கப்பட்டிருந்தது. எனவே, இனி நீங்கள் உங்களை தற்காத்துக் கொள்ள வேண்டும் என்று அல்லாஹ் கூறினான். மேலும் திருக்குர்ஆனில் சூரா அல்ஹஜ் வசனம் 41,42-ல் அதன் குறிப்பு இடம்பெற்றுள்ளது. இந்த வசனங்களில் அனுமதி நல்கியவாறு அல்லாஹ் கூறினான்: அல்லாஹ் எங்கள் இறைவன் ஆவான் என்று கூறியதன் காரணத்திற்காக உங்களது வீட்டை விட்டு வெளியேற்றப்பட்டீர்கள்; எனவே உங்கள் மீது அநீதியிழைக்கப்பட்டிருக்கின்ற காரணத்தினால் மட்டும் உங்களுக்கு உங்களை தற்காத்துக் கொள்வதற்கான அனுமதி நல்கப்படுகின்றது. பின்னர் அல்லாஹ் இந்தக் காரணத்தினாலும் அனுமதி வழங்கினான். அதாவது, தற்போது தற்காப்பு செய்யப்படாமல் இருந்தால் பின்னர் இறை ஆலயங்கள் அழிக்கப்பட்டுவிடும்; தேவாலயங்களும், யூதர்களின் வணக்க ஸ்தலங்களும், பின்னர் அதிகமாக அல்லாஹ்வின் பெயர் நினைவு கூரப்படும் பள்ளிவாசல்களும் அழிக்கப்பட்டு விடும்.

ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: இதன் பொருள் என்னவென்றால், எந்தவொரு மடமோ அல்லது தேவலாயமோ அல்லது இறை வணக்க ஸ்தலத்திற்கு எதிராகவோ ஜிஹாது செய்யும்படி இஸ்லாம் கூறவில்லை. மேலும், அன்பு, அமைதி, மத நல்லிணக்கம் போன்ற இஸ்லாத்தின் தூதுச் செய்தியை பரப்புவதற்காக ஜிஹாது செய்யும்படி இஸ்லாம் கூறுகின்றது. மேலும் இதுவே எங்களது விளக்கமாகும். எனவே நாங்கள் இன்று கூறுகின்றோம். அதாவது எந்தவொரு மதப் பிரிவும் அது கிறிஸ்துவப் பிரிவாக இருக்கட்டும் ; அல்லது யூதப் பிரிவாக இருக்கட்டும் ; இஸ்லாத்துடன் போர் புரியவில்லை. மாறாக, அவர்களது போர்கள் அனைத்தும் பெரும்பாலும் அரசியல் போர்களாகவே இருக்கின்றன. பின்னர், ஒவ்வொரு நாட்டிற்கும் தற்காப்பு செய்து கொள்வதற்கு உரிமை இருக்கின்றது. ஆயினும், தாலிபான் அல்லது அல்காயிதா போன்ற வகைப்பட்ட கூட்டத்தினரை வடிவமைத்து போர் புரிவது கூடாது. பின்னர் போரும் கூட யாருக்கு எதிராக ? முஸ்லிம்களுக்கு எதிராகவே போர் புரிவதா? உதாரணமாக, பாகிஸ்தானில் முஸ்லிம்கள் முஸ்லிம்களுக்கு எதிராக போர்


A. SAMSUL ALAM
A. ABDUL RAHIM



Dealers of Natural Precious & Semi-Precious Gemstones

TOONICE
DEALERS OF PRECIOUS & SEMI-PRECIOUS GEMSTONES
No. 100/59-A, 1st Floor, South Thaikkat Street Melapalayam, Tirunelveli-627005 Tamil Nadu, India
+91 9659389953 toonicegems@gmail.com

Al-Nida GEMS
No. 1/83, 1st Floor Village Road Balaji Nagar Extension Puzhuthivakkam, Chennai-600091 Tamil Nadu, India
+91 9042150339 alnidagems@gmail.com

HG GEMS
HANIYAHANA GEMS CO., LTD.
No. 191/16, Soi Puttha Osot Siphraya, Bangrak Bangkok - 10500 Thailand
+66 638751327 gemscertify22@gmail.com

புரிகின்றனர். மற்ற நாடுகளிலும் கூட நீங்கள் எந்த முஸ்லிம் குருப்பையும் ஒரு கிறிஸ்தவ அல்லது யூத குருப்களுடன் போர் புரிந்து கொண்டிருப்பதை காண மாட்டீர்கள். பாலஸ்தீனம் மற்றும் இஸ்ரேலில் நடக்கும் அந்த விஷயத்தை தவிர ; தற்போது சமீபத்தில் நான் ஐரோப்பியன் பார்லிமென்டில் உரை நிகழ்த்தினேன். அங்கு நான் கூறினேன்; ஐரோப்பிய அரசாங்கங்கள் இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனத்திற்கு இடையிலான போரில் உரிய பங்களிப்பை செலுத்த வேண்டும்; மேலும் நீதியுடன் செயல்பட வேண்டும். அதில் இரட்டை நிலைப்பாடு இருக்கக் கூடாது. ஆனால், இது மார்க்கப் போர் கிடையாது என்று இஸ்ரேல் புறமிருந்து ஒப்புக் கொள்ளப்படுகின்றது. அதேபோன்று ஹமாஸோ அல்லது வேறு எந்தவொரு குருப்போ அதனை மார்க்கப் போராக கூறியது கிடையாது. விவகாரம் என்னவென்றால், இஸ்ரேலியர்கள் பாலஸ்தீனியர்களின் நிலங்களை ஆக்கிரமித்து வருகின்றனர். மேலும், பாலஸ்தீனியர்களுக்கு எதிராக போர் செய்து வருகின்றனர்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: ஆக, ஜிஹாது என்பது எங்களது விளக்கத்திற்கு ஏற்ப இறைத் தூதர் (ஸல்) அவர்கள் எடுத்துரைத்தது ஜிஹாதே கபீர் ஆகும். அது இதுவாகும். அதாவது, பரிசுத்த வேதம் அதாவது திருக்குர்ஆனின் உதவியுடன் தப்லீஃக் செய்ய வேண்டும். அன்பு, அமைதி என்ற இஸ்லாத்தின் தூதுச் செய்தியை பரப்ப வேண்டும். மேலும் மனித குலத்தை அதன் படைத்தவனுக்கு அருகில் கொண்டு செல்ல வேண்டும்.

ஒரு நிருபர் இவ்வாறு கேள்வி கேட்டார்; ஜாமிஆ அஹ்மதிய்யா ஒவ்வொருவருக்காகவும், ஒவ்வொரு முஸ்லிமிற்காகவும் திறக்கப்பட்டுள்ளதா?

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: இந்த நிறுவனத்தின் அனைத்து சட்டதிட்டங்களை பேணி நடப்பதற்கு தயாராக இருக்கின்ற ஒவ்வொருக்காகவும் இது திறக்கப்பட்டுள்ளது. அப்படிப்பட்ட ஒவ்வொருவரும் வரவேற்கப்படுகின்றார். ஆனால், நாங்கள் இங்கு எதனை கற்பிக்கின்றோமோ அதனையே அவருக்கு படிக்க வேண்டியது இருக்கும். அவை அவரது சொந்த கொள்கை அல்லது கருத்திற்கு எதிராக இருந்தாலும் கூட சரியே! அவருக்கு அதனையே கற்க நேரிடும். நாம் அத்தகைய நபரை ஏற்றுக் கொள்வோம். நிபந்தனை என்னவென்றால், அவர் இந்த நிறுவனத்தின் சட்டத் திட்டங்களின்படி அமல் செய்ய வேண்டும். நீங்கள் இப்படிப்பட்ட நபரைக் கொண்டு வந்தால், அதாவது, நான் அஹ்மதி அல்லாதவராக இருந்தாலும் கூட நான் இந்த நிறுவனத்தின் சட்டதிட்டங்களை பேணி நடப்பேன் என்று கூறி கையொப்பம் இடுகின்ற நபரை நீங்கள் கொண்டு வந்தால் பின்னர் நாங்கள் அவரை வரவேற்போம்; நான் உங்களுக்கு இதற்கான உத்திரவாதம் அளிக்கின்றேன்.

இந்த பத்திரிகையாளர் சந்திப்பின் கடைசியில் பகுதியின் மேயர் கூறினார்: தங்களின் வருகைக்கு மிகவும் நன்றி ; தங்களை சந்தித்ததில் நான் மிகவும் மகிழ்ச்சி கொள்கிறேன். அவ்வப்போது எங்களுக்கு சந்திப்பிற்கான வாய்ப்பு கிடைத்துக் கொண்டிருக்கும் என்று நான் நம்புகிறேன். நாங்கள் உங்களது வெற்றிக்காக துஆ செய்கின்றோம். மேலும் இங்கு கல்வி பயிலக் கூடிய மாணவர்களின் வெற்றிக்காகவும் துஆ செய்கின்றோம். மீண்டும் ஒரு முறை நான் நன்றி செலுத்திக் கொள்கிறேன்.

மேயர் அவர்கள் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்..) அவர்களுடன் கைகுலுக்குவதற்கான கண்ணியத்தைப் பெற்றார்கள். ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களும் மேயருக்கு நன்றி செலுத்தினார்கள்.

இந்த பத்திரிகையாளர் சந்திப்பு நிறைவுற்றப் பிறகு ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஹாலுக்குச் சென்றார்கள்.அங்கு நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப ஜாமிஆ அஹ்மதிய்யாவின் மாணவர்கள் வகுப்பு வாரியாகவும், ஆசிரியர்களும் மற்றும் ஊழியர்களும் தமது அன்பிற்குரிய எஜமானருடன் நிழற்படம் எடுத்துக் கொள்வதற்கான நற்பேறு பெற்றார்கள்.

இதன் பிறகு ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் பரிவு கூர்ந்து அனைத்து மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்களுக்கு கைகுலுக்குவதற்கான கண்ணியத்தை வழங்கினார்கள். இதன் பிறகு ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் வெளி வளாகத்திற்கு சென்றார்கள். மேலும், அக்ரூட் செடி ஒன்றை நட்டினார்கள். மேலும் அதற்கு நீர் பாய்ச்சினார்கள். இதன் பிறகு இங்கிருந்து 2.05 மணியளவில் ஃபிரங்ஃபர்ட் நகரத்திற்கு புறப்பட்டுச் சென்றார்கள். இன்று லுஹர் மற்றும் அஸர் தொழுகை நிறைவேற்றும் நிகழ்ச்சியானது மஸ்ஜித் நூரில் வடிவமைக்கப்பட்டிருந்தது. புறப்படும் நேரத்தில் அனைத்து மாணவர்களும், ஆசிரியர்களும், ஊழியர்களும் மற்றும் ஜமாஅத் உறுப்பினர்களும் தங்களது கைகளை அசைத்தவாறு தமது அன்பிற்குரிய எஜமானருக்கு அல்விதா கூறினார்கள். மஸ்ஜித் நூர் ஃபிரங்ஃபர்ட் நோக்கி செல்லும் போது வழிப்பாதையில் ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் சிறிது நேரம் மதிப்பிற்குரிய அப்துல்லாஹ் வாகஸ் ஹவுஸர் ஸாஹிப், அமீர் ஜமாஅத் ஜெர்மனி அவர்களின் வீட்டிற்கு சென்றார்கள். 3.10 மணிக்கு ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மஸ்ஜித் நூர் ஃபிரங்ஃபர்ட்டிற்கு வருகை தந்தார்கள்.அங்கு உள்ளூர் ஜமாஅத் உறுப்பினர்கள் ஹுஸூர் அன்வர் அவர்களை வரவேற்று நல்வரவு கூறினார்கள். ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் லுஹர் மற்றும் அஸ்ர் தொழுகைகளை ஜமுஉ செய்து தொழ வைத்தார்கள். தொழுகைகளை நிறைவேற்றியப் பிறகு ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இங்கிருந்து பைத்துஸ் ஸுபூஹ் பள்ளிவாசலுக்கு புறப்பட்டுச் சென்றார்கள்.

**மஸ்ஜித் நூர் ஃபிரங்ஃபர்ட்**

ஜெர்மனி, ஃபிரங்ஃபர்ட்டில் கட்டப்படக் கூடிய அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இரண்டாவது மஸ்ஜித், மஸ்ஜித் நூர் ஆகும். அது 1959-ல் கட்டப்பட்டது. அதற்கு முன்னர் 1955-ல் மஸ்ஜித் ஃபஸ்லே உமர் என்ற பள்ளிவாசல் ஹம்பர்க்கில் கட்டப்பட்டிருந்தது.

ஃபிரங்ஃபர்ட்டில் மஸ்ஜித் நூர் கட்டப்பட்டபோது, அந்நேரத்தில் இங்கு அஹ்மதி சகோதரர்களின் எண்ணிக்கை வெறும் இரண்டு மட்டுமே ஆகும். தற்போது மேலான அல்லாஹ்வின் அருளினால் ஃபிரங்ஃபர்ட் மண்டலத்தில் அஹ்மதிகளின் எண்ணிக்கை 2000 ஆகும்.

மஸ்ஜித் நூரிலிருந்து மஸ்ஜித் பைத்துஸ் ஸுபூஹ்வின் தொலைவு 28 கி.மீ ஆகும். மஸ்ஜித் நூரிலிருந்து புறப்பட்டு 4 மணிக்கு ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் பைத்துஸ் ஸுபூஹ் பள்ளிவாசலுக்கு வருகை தந்தார்கள். ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தமது தங்குமிடத்திற்கு சென்று விட்டார்கள்.

**குடும்ப சந்திப்பு**

நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப 6 மணிக்கு ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தமது அலுவலகத்திற்கு வருகை தந்தார்கள். மேலும் குடும்பங்களுடனான சந்திப்பு துவங்கியது.

இன்று 30 குடும்பங்களைச் சேர்ந்த 103 நபர்களும், 40 நபர்கள் தனிப்பட்ட முறையிலும் மொத்தம் 143 நபர்கள் தமது அன்பிற்குரிய எஜமானரை சந்திக்கும் நற்பேறு பெற்றார்கள். இந்த அனைத்து நபர்களும் மற்றும் குடும்பங்களும் ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுடன் நிழற்படம் எடுத்துக் கொள்வதற்கான நற்பேறு பெற்றார்கள்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் பரிவு கூர்ந்து கல்வி பயின்று வரும் மாணவ மற்றும் மாணவிகளுக்கு எழுதுகோலை அன்பளிப்பாக வழங்கினார்கள். மேலும் சிறுவயது பிள்ளைகளுக்கு சாக்லேட் அன்பளிப்பாக வழங்கினார்கள்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களை சந்திக்கும் வாய்ப்பு பெற்ற குடும்பங்கள் மற்றும் ஜமாஅத் உறுப்பினர்கள் கீழ்கண்ட ஜமாஅத்துகளிலிருந்து வந்திருந்தனர்:

Hanau, Seligestadt, Freburg, Ludenscheild, Raunheim, Boblingen, Kassel, Wittlich, Wiesbaden, Stuttgart, Reutlingen, Wurzburg, DA-Grieshem, Mannheim, Herborn, Oberursel, Offenbanch, FFM_Zelisheim,


Proprietor off : 044- 2260 1886

RAZIK XEROX & TELECOM

AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE

AO MULTI COLOUR PLAN XEROX



- PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
- LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
- SCANNING, RECHARGE, COLOUR XEROX,
- ALL VEHICLE INSURANCE, COURIER

NO:1,V.V COLONY, 1ST STREET, ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com



GRIZZLY
BE ALWAYS AHEAD

Manufacturer and Retailer of Leather Fashion and Bags.
Specialized in the Desing and Production of Quality & Sale Online Platform Like Flipkart, Amazon, Meesho. & Product Key Word is "Grizzly Wallet"
6294738647 mygrizzlyindia@gmail.com, www.mygrizzlyindia.com
my grizzly india
my grizzly india
my grizzly india

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 9 THU 14 NOVEMBER 2024 Issue No.46

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

Frankfurt,Dreieich,Gross - Umstadt,Mainz,Soest, Nidda, Iserlohn, Waldshut, PFungstadt,Gaggenau, Regensburg,Bensheim, Pforzheim,Eich-Worms, Hof, Eich-Worms, Freinsheim,Trier.

இது தவிர, ஆஸ்திரேலியாவில் இருந்து வந்திருந்த ஒரு குடும்பமும் ஹுஸுர் அன்வர் அவர்களை சந்திப்பதற்கான நற்பேறு பெற்றது. சந்திப்பிற்கான இந்த நிகழ்ச்சி 8.45 மணி வரை தொடர்ந்தது. அதன் பிறகு ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மஹ்ரிப் மற்றும் இஷா தொழுகைக்காக வருகை தந்தார்கள்.

**ஆமீன் நிகழ்ச்சி**

தொழுகைகளை நிறைவேற்றுவதற்கு முன் ஆமீன் நிகழ்ச்சி நடைபெற்றது. ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கீழ் கண்ட 29 சிறுவர்கள் மற்றும் சிறுமிகளை திருக்குர்ஆனிலிருந்து ஒவ்வொரு வசனத்தை ஓதச் செய்து செவியுற்றார்கள். மேலும் இறுதியில் துஆ செய்து வைத்தார்கள்.

ஆமீன் நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் நற்பேறு பெற்ற பிள்ளைகளின் பெயர்கள் கீழ்வருமாறு:

1. தானியால் கான் 2. ஹஷ்ஷாம் தாரிக் 3. தானிஷ் ஆஹில் தாரிக் 4. அஃப்பான் அஹ்மத் 5. அஸ்ஃபான் அஹ்மத் 6. ஃபரீத் அஹ்மத் 7. முஅஸுத்தீன் 8. ஹமாத் அஹ்மத் 9. யாஷா அஹ்மத் 10. நவீத் அஹ்மத் 11. ஸமர் அக்ரம் 12. முனீப் ஹுத் அஹ்மத் 13. மீரப் அலைய்னா பட்டீ 14. ஸபாயினா மலிக் 15. ரம்ஷா ஸபா 16. ஸபாஹத் தாரிக் 17. மலாயிகா யாஸர் ரியாஸ் 18. மாரியா சீமா 19. ஸானியா ஸஃபர் 20. மாஃ நூர் உஸ்மான் பட்டீ 21. பாஸ்மா அஃப்ஸல் 22. லேஸ் அக்தர் 23. மாரியா ஸஃபர் 24. பாஸ்மா அஹ்மத் 25. தானியா அஹ்மதியா 26. நூர் ஹமீதா 27. ஆலியா கோகர் 28. ராபிஆ மன்ஸுர் 29. அலைய்னா கோகர்

இதன் பிறகு ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மஹ்ரிப் மற்றும் இஷா தொழுகைகளை ஜமுஉ செய்து தொழ வைத்தார்கள். தொழுகைகளை நிறைவேற்றியப் பிறகு ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தமது தங்குமிடத்திற்கு சென்று விட்டார்கள்.

**ஈமானை வலுவூட்டும் ஒரு சம்பவம்**

ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் டிசம்பர் 15, 2009 அன்று ஜாமிஆ அஹ்மதிய்யாவின் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டியபோது, அந்தப் பகுதியின் ஃபர்ஸ்ட் கவுன்டி கவுன்ஸிலர் MR. THOMAS WILL அடிக்கல் நாட்டுகின்ற அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருந்தார்கள். ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இந்த துவக்க விழா நிகழ்ச்சியில் தமது சொற்பொழிவில் MR. THOMAS WILL அவர்களின் பெயரை கமிஷனர் என்று குறிப்பிட்டிருந்தார்கள். சொற்பொழிவில் கமிஷனர் என்று கூறியே அவரை விழித்திருந்தார்கள். ஆனால் அந்நேரம் அவரிடம் கமிஷனர் என்ற பதவி வகிக்கவில்லை. மாறாக, அவர் ஃபர்ஸ்ட் கவுன்டியின் கவுன்ஸிலராக மட்டும் பணி செய்து கொண்டிருந்தார்.

ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் அருளுக்குரிய நாவிலிருந்து வெளிவந்த இந்த விஷயத்தை அல்லாஹ் முழுமை செய்து விட்டான். நான் கமிஷனர் ஆவேன் என்று அவர் கனவிலும் நினைத்திருக்கவில்லை. 2010-ம் ஆண்டு, கிர்தாஸ்கிராவ் மாவட்டத்தின் சார்பாக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, மேலும், MR. THOMAS WILL ஸாஹிப் கவுன்டி கவுன்ஸிலர் தேர்தலில் போட்டியிட்டபோது அவர் 59 வாக்குகள் பெற்று வெற்றி பெற்று விட்டார். அல்லாஹ் தனது கலீஃபாவின் நாவிலிருந்து வெளியாகியிருந்த சொல்லை அவருக்கு ஆதரவாக முழுமை செய்துவிட்டான். இதனைக் கண்டு உள்ளம் அல்லாஹ்வின் புகழ்ச்சியால் நிறைந்து விடுகின்றது. அதாவது, நம்மவர்கள் மட்டும் அல்ல ; மாறாக, அந்நியர்களும் கூட கலீஃபத்துல் மஸீஹின் அருளுக்குரிய இருப்பால் பயனடைகின்றனர் என்பதை எண்ணி உள்ளம் அல்லாஹ்வை புகழ்கின்றது. அவர் தற்போதும் கவுன்டி கமிஷனர் என்ற பொறுப்பை வகித்து வருகின்றார். **(தொடரும்...)**

(நன்றி: அல்ஃபஸ்ல் இன்டர் நேஷனல், 01. 03. 2013)

தமிழாக்ககம்
மவ்லவி A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * * *

**ஸத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா அலுவலகத்தில் ஓட்டுனர் பணிக்கான வேலை வாய்ப்பு குறித்த அறிவிப்பு**

**நிபந்தனைகள்**

(1) விண்ணப்பதாரர் 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் 40 வயதை விட குறைந்தவராகவும் இருக்க வேண்டும் (2) விண்ணப்பதாரர் குறைந்தபட்சம் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். (3) விண்ணப்பதாரரிடம் நான்கு சக்கர வாகனத்திற்கான முறையான ஓட்டுனர் உரிமம் இருக்க வேண்டும். (4). விண்ணப்பதாரருக்கு ஏதாவது அரசாங்கம் அல்லது தனியார் நிறுவனத்தில் 2 ஆண்டுகள் ஓட்டுனராக பணியாற்றிய அனுபவம் இருக்க வேண்டும். விண்ணப்பதாரர் தனது விண்ணப்பத்துடன் மேற்குறிப்பிட்ட எந்த நிறுவனத்தில் பணிபுரிந்தாரோ அங்கு பணியாற்றியதற்கான அனுபவ சான்றிதழை இணைக்க வேண்டும். (5) விண்ணப்பதாரர் தனது பிறப்பு சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும். (6) விண்ணப்பதாரர் எழுத்துத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வில் வெற்றி பெறுவது அவசியமாகும். (7) எழுத்துத் தேர்விலும், நேர்முகத் தேர்விலும் வெற்றி பெறக் கூடிய விண்ணப்பதாரருக்கு டிரைவிங் டெஸ்டும் நடத்தப்படும். (8) விண்ணப்பதாரர் நூர் மருத்துவ மனை காதியானிலிருந்து மெடிக்கல் ஃபிட்னஸ் சான்றிதழிற்கு ஏற்ப உடல் ஆரோக்கியமுடையவராக இருக்க வேண்டும். (9) விண்ணப்பதாரருக்கு பணி நியமனத்திற்குப் பிறகு இரண்டாம் நிலை ஊழியருக்கு சமமான அலோவன்ஸும் இதர சலுகைகளும் வழங்கப்படும். (10) தேர்வு செய்யப்படும் சூழலில் விண்ணப்பதாரர் காதியானில் துவக்கத்தில் ஐந்து வருடங்கள் வரை தமது இருப்பிடத்திற்கான ஏற்பாட்டை தாமே செய்து கொள்ள வேண்டும். (11) காதியான் போக்குவரத்து பயணத்திற்கான செலவு போட்டியாளருடையதாக இருக்கும்.

**மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்**

நஸாரத் தீவான் ஸத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா காதியான்
அஞ்சல் எண் 143516
மொபைல் எண்கள்: **09682627592, 09888232530**
அலுவலக தொலைபேசி எண்: **01872 - 501130**
E-mail: diwan@qadian.in

** * * * * * *

**National Watch Company**
Sales & Service

B. Mohamed Adil
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM
99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT
99430 30230


All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad